# 1. பயன்பாட்டின் எல்லை

## 1.1. நோக்கம்

இப்பொதுவான வியாபார நிபந்தனைகள் (இதனகத்துப் பின்னர் ‘‘பொதுவான நிபந்தனைகள்’’ எனக் குறிப்பீடு செய்யப்படும்) நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சி (இதனகத்துப் பின்னர் ‘‘வங்கி’’ எனக் குறிப்பீடு செய்யப்படும்) மற்றும் அதன் வாரிசுகள் மற்றும் உரிமைபட்டவர்கள் (வரையறைகள் இல்லாமல் ஒப்பந்தங்கள், பரஸ்பர பரிமாற்றல்கள், தேர்வுகள் மற்றும் ஏதேனும் பெறுதிக் கொடுக்கல்வாங்கல்கள் உட்பட) தொடர்பான வாடிக்கையாளர் கணக்குகள், கையாளல்கள், கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் வியாபாரங்களுக்கும் ஆளுகை செய்யவும் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

## 1.2. திருத்தங்கள்

இங்கே உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகளும் நிபந்தனைகளும் வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டு வங்கியினால் அதன் தற்றுணிவிற்கேற்ப காலத்திற்குக் காலம் திருத்தப்பட அல்லது மாற்றியமைக்கப்பட முடியும்.

### 1.2.1 கணக்குகளைப் பேணுதல்

#### 1.2.1.1 காலாந்தர ஐந்தொகைக் கூற்றுக்கள்

##### 1.2.1.1.1 காலாந்தர ஐந்தொகைக் கூற்றுக்களை வழங்குதல்

வேறுவிதமாக இணங்கிக் கொள்ளப்பட்டாலொழிய, தொழிற்படுகின்ற நிலையிலுள்ள வாடிக்கையாளர் கணக்குகளுக்காக, வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய கால இடைவெளிகளில் காலாந்தர ஐந்தொகைக் கூற்றுக்களை (ஒன்றில் காகிதத்தில் அல்லது இலத்திரனியல் வடிவில்) வங்கி வழங்கும்.

##### 1.2.1.1.2 ஆட்சேபனைகளுக்காக அனுமதிக்கப்பட்ட காலம்

வாடிக்கையாளரினால் பெறப்பட்ட காலாந்தர ஐந்தொகைக் கூற்றில் காணப்படக்கூடிய பிழைகள் அல்லது பூரணமற்ற தன்மைகள் தொடர்பில் வாடிக்கையாளர் கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் ஆட்சேபனைகளைச் சரியான விதத்தில் எழுப்பலாம். எனினும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும அத்தகைய ஆட்சேபனைகள் காலாந்தரக் கூற்றிலுள்ள திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் எழுத்து மூலம் வங்கிக்கு கிடைக்கச் செய்யப்படுதல் வேண்டும்.

மேலே குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் எந்தவொரு ஆட்சேபனையும் கிடைக்கப்பெறவில்லையாயின் காலாந்தரக் கூற்று சரியானது எனக் கருதப்படுவதுடன் வாடிக்கையாளரைப் பிணித்தலும் வேண்டும்.

#### 1.2.1.1.3 கூற்றுக்களின் பிரதிகள்

வாடிக்கையாளர் அவரின்/அவளின் கூற்றுக்களது பிரதிகளைப் பேணுவதற்குப் பொறுப்பாவார். கூற்றுக்களினது காகிதப் பிரதிகளை வங்கியிலிருந்து கோரப்பட்டால் வங்கி அதன் பிரசுரிப்புத் தீர்வைக்கிணங்க, அத்தகைய மேலதிகப் பிரதிகளுக்காக தீர்வையை விதிப்பதற்கான உரிமையினை தன்னகத்தே கொண்டிருக்கிறது.

### 1.3 வங்கியினால் செய்யப்படும் பதிவுகளில் மாற்றங்கள் மற்றும் திருத்தங்கள்

ஏதேனும் கணக்குகளில் ஏற்படும் பிழையான பதிவுகளை மேலதிகப் பதிவொன்றின் மூலம் (மாற்றுப் பதிவு) ஒன்றில் அடுத்த காலாந்தர ஐந்தொகைக் கூற்றுக்களை வெளியிடுவதற்கு முன்னர் அல்லது பின்னர் அல்லது சேமிப்புப் புத்தகத்தினை புதுப்பிப்பதன் மூலம் மாற்றிப்பதியவோ, திருத்தவோ அல்லது இரத்துச் செய்யவோ முடியும். தேவையற்ற தாமதங்கள் இல்லாமல் வங்கி வாடிக்கையாளர்களுக்கு அத்தகைய ஏதேனும் மாற்றங்களை அல்லது திருத்தங்களை அல்லது இரத்துச் செய்தல்களை அறிவிக்கும்.

வட்டிக் கணிப்புக்கள் தொடர்பில் செய்யப்படும் ஏதேனும் திருத்தங்கள் தொடர்பில் (அல்லது மற்றைய கூற்றுக்கள்) வங்கி அது பொருத்தமானது எனக் கருதும் விதத்தில் திருத்தங்களைச் செய்வதற்கான தற்துணிப்பினை தன்னகத்தே கொண்டுள்ளது.

### 1.4 மேலதிக பற்றுத் தொகைகள்

வாடிக்கையாளரின் ஏதேனும் கொடுப்பனவுகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக அல்லது வாடிக்கையாளரின் ஏதேனும் அறிவுறுத்தல்களை மேற்கொள்வதற்காக வங்கி அதன் தற்துணிபின்படி (அவ்வாறு செய்வதற்கான கடப்பாடுகளை வங்கி கொண்டிருக்காமலே) கொடுகடன்களை, நிதியியல் வசதிகளை அல்லது முற்பணங்களை வழங்கலாம் என்பதுடன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும அதன் மூலம் ஏற்படுகின்ற அனைத்துப் பொறுப்புக்களையும் வாடிக்கையாளர் அதன்கண் இணங்கியவாறு:

(i) வாடிக்கையாளர் வங்கியின் கோரிக்கையின் பேரில் மீளச்செலுத்துதல் வேண்டும் (வேறுவிதமாக எழுத்து மூலம் வங்கியுடன் இணங்கிக் கொள்ளப்பட்டலான்றி) அத்துடன்

(ii) அத்தகைய பரஸ்பரம் இணங்கிக் கொள்ளப்பட்ட விதத்தில் அல்லது அத்தகைய உடன்படிக்கை இல்லாதவிடத்து, உள்ளக நடைமுறைகளுக்கிணங்க வங்கி நியாயமான முறையில் தீர்மானிக்கின்ற அத்தகைய விதத்தில் வட்டியினைச் செலுத்துதல் வேண்டும்.

### 1.5 கணக்குகள் தொடர்பான அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்கள் அல்லது மோசடியுடன் தொடர்புபட்ட கொடுகடன் சாதனம் தொடர்பில் உரிய தரப்பினர்களின் பொறுப்புக்கள்

அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல்வாங்கலொன்று இடம்பெறும் சந்தர்ப்பத்தில், வங்கியை உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு வாடிக்கையாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது. சந்தேகத்திற்குரியது அல்லது வழமைக்கு மாறானது எனத் தோன்றும் கொடுக்கல்வாங்கல்களை தடைசெய்வதற்கான உரிமையினை வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

சந்தேகத்திற்குரிய மோசடி இடம்பெறும் சந்தர்ப்பத்தில், அத்தகைய சந்தேகத்தின் செல்லுபடித்தன்மை பற்றி தீர்மானிப்பதற்காக வங்கி விசாரணைகளை மேற்கொள்ளும். இது கொடுக்கல்வாங்கல் பதிவேடுகளை மீளாய்வு செய்தல், பாதுகாப்புத் தடயங்களைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்காக வாடிக்கையாளரைத் தொடர்புகொள்ளுதல் என்பனவற்றை உள்ளடக்கியதாக அமையும்.

### 1.6 சேகரிப்புக் கட்டளைகள்

#### 1.6.1 ஆவணங்களைச் சமர்ப்பிப்பதன் மீது மேற்கொள்ளப்படுகின்ற நிபந்தனைக்குரிய கடன் பதிவுகள்

கொடுப்பனவு வங்கி அல்லது நிறுவனத்தின் கொடுப்பனவிற்கு முன்னர், காசோலையின் எதிர்மதிப்பு, ஏனைய சாதனங்கள் அல்லது நேரடிப் பற்றுக்களுக்கெதிரான பெறுமதியில் வாடிக்கையாளர்களுக்கு வங்கி கடன் வழங்கியிருப்பின், இவ்விடயங்களை வங்கியிலேயே கொடுப்பனவு செய்யக்கூடியதாக இருப்பினும் கூட, வங்கிக்கு முழுமையாக காலம் தவறாமல் செலுத்தப்படல் வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் மாத்திரமே செய்யும்.

அத்தகைய காசோலைகள், சாதனங்கள், விடயங்கள் அல்லது நேரடிப் பற்றுக்களை மேலே சொல்லப்பட்டவாறு வங்கிக்குச் செலுத்தப்படாதுவிடின் அல்லது சேகரிப்புக் கட்டளையின் கீழ் அத்தொகையை வங்கி பெறாதுவிடின், அந்நேரத்தில் காலாந்தர ஐந்தொகைக் கூற்றுக்கள் வழங்கப்பட்டிருக்கின்றனவா அல்லது இல்லையா என்பதனை கவனத்திற்கொள்ளாது வங்கி நிபந்தனையுடன் கூடிய கொடுகடன் பதிவினை அத்துடன்/அல்லது வாடிக்கையாளரின் ஏதேனும் கணக்கின் பற்றினை (வட்டி மற்றும் செலவு உட்பட) இரத்துச் செய்யக்கூடிய தகைமையினைக் கொண்டிருக்கும்.

### 1.6.2 வாடிக்கையாளரினால் மேற்கொள்ளப்பட்ட நேரடிப் பற்றுக்கள் மற்றும் காசோலைக் கொடுப்பனவுகள்

வங்கியின் வழமையான நடைமுறைகளுக்கிணங்க பற்றுப் பதிவு இரத்துச் செய்யப்படாதிருப்பின் நேரடிப் பற்றுக்களும் காசோலைகளும் செலுத்தப்படுகின்றன.

### 1.7 வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலும் கொடுக்கல்வாங்கல்களிலும் சேர்ந்து காணப்படும் இடர்நேர்வு

பின்வரும் பொதுவான நியதிகளும் நிபந்தனைகளும், வங்கியில் திறந்து, பேணப்பட்டுவரும் அனைத்து வெளிநாட்டு நாணயக் கணக்குகளையும் காலத்திற்குக் காலம் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படக்கூடிய அல்லது ஆக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள், வழிகாட்டல்கள் மற்றும் ஏனைய தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்குட்பட்டு ஆளுகை செய்வனவாக இருத்தல் வேண்டும்.

### 1.7.1 வெளிநாட்டு நாணயக் கணக்குகள்

அ) இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட நாணயங்களில் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறந்து பேணி வரமுடியும்.

ஆ) ஏதேனும், அத்தகைய கணக்குகள் தொடர்பில், வங்கி, ஆரம்ப குறைந்தபட்ச வைப்புத் தொகை பற்றி குறித்துரைக்க முடியும்.

இ) வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் நோக்கத்திற்காக நம்பிக்கைப் பொறுப்புக்களை வங்கி அங்கீகரிக்காது.

ஈ) கணக்கில் பற்று வைப்பதற்காக வெளிநாட்டு நாணயத் தாள்களை வழங்குவது இலங்கை மத்திய வங்கியினால் அல்லது வேறு ஏதேனும் தொடர்பான அதிகாரசபையினால் விடுக்கப்பட்டு காலத்திற்குக் காலம் நடைமுறையிலிருக்கும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்குட்பட்டிருக்கும். கணக்கில் பேணப்படும் வெளிநாட்டு நாணயத்திற்குப் பதிலாக வெளிநாட்டு நாணயத் தாள்களை வழங்க வேண்டும் என்ற கடப்பாட்டினை வங்கி எந்தவொரு நேரத்திலும் கொண்டிருக்காது. எனினும், வங்கி வாடிக்கையாளருக்கு அத்தகைய நாணயத் தாள்களை வழங்குவதாயின் அப்போது நிலவுகின்ற சந்தை வீதங்களில் அதனை அவ்வாறு செய்யும்.

### 1.7.2 வைப்புக்கள்

அ) வாடிக்கையாளரின் ஒத்த நாணயத்தினைக் கொண்ட கணக்கொன்றிற்கு அல்லது வேறொரு வெளிநாட்டு நாணயத்தினைக் கொண்ட கணக்கிற்கு வெளிநாட்டு நாணயத்

தாள்களை வைப்புச் செய்வது ஒவ்வொரு சாதனத்திற்கும் நிலவுகின்ற செலாவணி வீதத்திற்கும் தொடர்பான ஒவ்வொரு நாணய ஜோடிகளுக்கும் உட்பட்டதாகும்.

ஆ) வங்கியின் மீது வரையப்படாத வரைவுகளையும் ஏனைய கொடுப்பனவுக் கட்டளைகளையும் கொள்வனவு செய்வதா அல்லது சேகரிப்பிற்கு அனுப்புவதா எனத் தீர்மானிப்பதற்கான முழுத் தற்றுணிபினையும் வங்கி கொண்டிருக்கிறது. கொள்வனவு செய்யும் வங்கியினால் அவை மறுக்கப்படும் சந்தர்ப்பத்தில் கொள்வனவு செய்து கொண்ட அனைத்துச் சாதனங்கள் தொடர்பில் வங்கி விதிப்புக்கள் உட்பட அனைத்துச் செலவுகளையும் (கட்டணங்கள் உட்பட) தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கும். மறுக்கப்பட்டமை தொடர்பான அறிவித்தல் பெறப்படுவதன் மேல் வாடிக்கையாளரின் கணக்கில் பற்று வைக்கப்படும்.

இ) வங்கி மீது வரையப்பட்ட வரைவுகள் ஏதேனும் கணக்கிற்கு வரவு வைக்கப்படும் போது, வங்கி அது பிரசுரித்திருந்த தீர்வைகளுக்கிணங்க கையாளல் கட்டணங்களை கழித்துக் கொள்ளும். அத்தகைய வைப்புக்களின் பெறுமதித் திகதி வங்கியின் அப்போது நிலவும் கொள்கையினைப் பொறுத்து வங்கியினால் தீர்மானிக்கப்படும். வங்கி மீது வரையப்பட்டிருக்காத வரைவுகள்/காசோலைகள்/ஏனைய கைமாற்றத்தக்க சாதனங்களைக் கணக்கில் வரவு வைப்பதற்காக கொள்வனவு செய்யும் போது, சாதனங்களின் முகப்புப் பெறுமதியிலிருந்து கையாளல் கட்டணங்களுக்குப் புறம்பாக கழிவிடல் கட்டணங்களும் அவை கணக்கிற்கு வரவு வைக்கப்படும் வேளையில் கழித்துக்கொள்ளும.

### 1.7.3 பணவனுப்பல்கள்

அ) பணவனுப்பலை/வரைவினை அனுப்புதல் தொடர்பான இடர்நேர்வுகள் அனைத்தும் விண்ணப்பதாரியைச் சார்ந்ததாகும்.

ஆ) வங்கி பொதுவாக அனுப்பப்பட்ட நிதியத்தினை, பணவனுப்பலில் குறித்துரைக்கப்பட்டவாறு அல்லது அத்தகைய நிதியம் பெறப்பட்ட திகதியிலுள்ள சிறந்த பெறுமதிக்கேற்ப வங்கியின் நல்லெண்ணத்துடன் தீர்மானிக்கப்படுகின்றவாறு அல்லது அதனைத் தொடர்ந்து அவ்வாறு பெறப்பட்ட நாணயத்தின் ஏற்புடைத்தான வாங்கும் விதத்தில் பயன்பெறும் நாணயத்திற்கு மாற்றுகிறது. அவ்வாறு மாற்றும் திகதியை வங்கி அதன் தற்றுணிபின்படி தீர்மானிக்கும்.

இ) பணவனுப்பலொன்று இரத்துச் செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தினைப் பொறுத்தவரை, பணவனுப்பல் பெறப்பட்ட நேரத்திலும் கணக்கிற்கு மீளளிப்புச் செய்யப்படுகின்ற நேரத்திலும் நிலவிய செலாவணி வீதத்தில் காணப்பட்ட வேறுபாடுகளைக் கவனத்திற்கொண்டு தொடர்பு வங்கியிலிருந்து பெறப்பட்ட உண்மையான தொகையின் அடிப்படையில் மாத்திரம் மீளளிப்பு மேற்கொள்ளப்படும். வங்கி அதனால்

பிரசுரிக்கப்பபட்டவாறான தொடர்பான வாங்கல் மற்றும் விற்றல் வீதங்களைப் பிரயோகிக்கலாம் என்பதுடன் வங்கியினாலும் அதன் தொடர்பு வங்கி அல்லது முகவரினாலும் விதிக்கப்பட்ட ஏதேனும் கட்டணங்களையும்˙ உறப்பட்ட செலவுகளையும் திருப்பிபெற்றுக்கொள்வதற்கு உரித்துடையதாகும். சேகரிக்கப்பட்ட அனைத்து இரத்துச் செய்தல் கட்டணங்கள், விதிப்புக்கள் மற்றும் தரகுகள் மீளளிக்கப்படமாட்டா.

ஈ) பணவனுப்பல் பெறப்படும் நேரத்தில் காணப்படும் செலாவணி வீதங்களுக்கும் இரத்தச்செய்யப்படும் அல்லது அது திருப்பியனுப்பப்படும் நேரத்தில் காணப்படும் சேலாவணி வீதங்களுக்குமிடையிலான வேறுபாடுகளுக்கு வங்கி பொறுப்பாகமாட்டாது. அத்தகைய இரத்துக்கள் அல்லது திருப்பியனுப்புதல் தொடர்பில் இழப்புக்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் வாடிக்கையாளர் அதனை தாங்கிக்கொள்ளுதல் வேண்டும். அத்தகைய இரத்துச் செய்தல்கள் காரணமாக ஏற்படும் இலாபங்கள் வாடிக்கையாளருக்கு வழங்கப்படமாட்டா.

உ) கொடுப்பனவுகளில் அல்லது கொடுப்பனவு பற்றுச்சீட்டுக்களை வழங்குவதில் ஏற்படும் தாமதம், கொண்டு செல்லப்படும் போது அல்லது வேறுவிதத்தில் பொருட்களுக்கு ஏற்படும் இழப்பு, சிதைப்பு, தவறுகள், விடுகைகள், இடையூறுகள் அல்லது பரிமாற்றல்களில் காணப்படும் தாமதங்கள் அல்லது ஏதேனும் பொருட்கள், கடிதங்கள், தொலைநகல், தந்தி விநியோகங்களில் ஏற்படும் தாமதங்கள் அல்லது வங்கியின் தொடர்பு வங்கி அல்லது முகவர்களினால் ஏற்படும் தாமதங்கள் என்பனவற்றினால் ஏற்படும் வெளிநாட்டு நாணயச் செலாவணி இழப்புக்களுக்கு அல்லது வேறு ஏதேனும் இழப்பு அல்லது சேதங்களுக்கு வங்கி பொறுப்பாக இருக்காது.

### 1.7.4 வாடிக்கையாளர்களின் இடர்நேர்வு

வாடிக்கையாளர் ஒவ்வொரு வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களையும் மேற்கொள்ளும் போது, வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்கள் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுகளுடன்தொடர்புபட்டவை என்பதனையும் இதற்காக வங்கி பொறுப்பாகமாட்டாது என்பதனையும் முழுமையாக அறிந்திருத்தல் வேண்டும்.

ஏதேனும் வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்களை இரத்துச் செய்யும் சந்தர்ப்பத்தில், அத்தகைய இரத்துச்செய்தலின் விளைவாக இழப்புக்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் வாடிக்கையாளர் அதனைப் பொறுப்பேற்றுக் கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய இரத்துச் செய்தலின் மூலம் கிடைக்கக்கூடிய ஏதேனும் நன்மைகள் வாடிக்கையாளருக்கு மாற்றல் செய்யப்படமாட்டாது.

## 2. வாடிக்கையாளரின் கடமைகள்

### 2.1 கட்டளைகளின்/அறிவுறுத்தல்களின் தெளிவானதன்மை

எந்தவொரு வகையிலுமான கட்டளைகள்/அறிவுறுத்தல்கள் சரியான நேரத்தில் மேற்கொள்ளப்படுவனவாகவும் தெளிவானவையாகவும் சந்தேகத்திற்கு இடமின்றி அவை தெளிவான உள்ளடக்கத்தினைக் கொண்டனவாகவும் இருத்தல் வேண்டும். அறிவுறுத்தல்களில் செய்யப்படும் திருத்தங்கள், உறுதிப்படுத்தல்கள், மீளத்தயாரித்தல்கள் அவ்வாறே குறித்துரைக்கப்படுதல் வேண்டும்.

### 2.2 கட்டளைகள்/அறிவுறுத்தல்களை நிறைவேற்றுவதுடன் தொடர்பான அவசரநிலை பற்றிய விசேட குறிப்புக்கள்

வாடிக்கையாளரொருவர் குறிப்பாக கட்டளைகள்/அறிவுறுத்தல்களைச் சரியான முறையில் நிறைவேற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்வாராயின் (உதாரணமாக: பணமாற்றலொன்று குறிப்பிட்ட திகதியன்று பெறுபவரின் கணக்கிற்கு வரவு வைக்கப்படல் வேண்டும்) அந்த தேவை பற்றி வாடிக்கையாளர் வங்கிக்குத் தனியாகத் அறிவிக்க வேண்டும்.

### 2.3 வங்கியிலிருந்து பெறப்பட்ட அறிவித்தல்களைப் பரீட்சித்தல் மற்றும் அது பற்றிய ஆட்சேபனைகள்

வாடிக்கையாளர் கணக்குக் கூற்றுக்கள் (பந்தி 2.1இன் மூலம் ஆளுகை செய்யப்படும் காலாந்தர ஐந்தொகை கூற்று தவிர) கொடுக்கல்வாங்கல் கூற்றுக்கள், பிணையங்களின் கூற்றுக்கள் மற்றும் அதன் முதலீட்டு வருமானம், ஏனைய கூற்றுக்கள், கட்டளைகள்/அறிவுறுத்தல்கள் பற்றிய ஆலோசனைகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் கொடுப்பனவுகள் மற்றும் கப்பற்சரக்குகள் பற்றிய அவற்றின் சரியான மற்றும் முழுமையான தன்மைகள் பற்றிய தகவல்கள் என்பனவற்றை உடனடியாகப் பரீட்சித்து அவை தொடர்பில் ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் எழுத்து மூலமாக வங்கிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டுமென்பதுடன் மேற்குறிப்பிட்ட விதத்தில் ஆட்சேபனைகள் எதுவுமில்லையாயின் மேலே குறிப்பிடப்பட்ட கூற்றுக்கள், பற்றுச்சீட்டுக்கள் மற்றும் தகவல்கள் சரியாக இருக்கின்றன எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் வாடிக்கையாளர்களை அது பிணித்தலும் வேண்டும்.

### 2.4 கூற்றுக்கள் கிடைக்காத சந்தர்ப்பத்தில் வங்கிக்கு அறிவித்தல்

பந்தி 2.1.1இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் காலாந்தரக் கூற்றுக்கள் அத்துடன்/அல்லது ஏதேனும் மற்றைய கூற்றுக்கள் அல்லது பற்றுச்சீட்டுக்கள் அல்லது தகவல்கள் பெறப்படாத சந்தர்ப்பத்தில் வாடிக்கையாளர் அது பற்றி வங்கிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

## 3. வங்கிச் சேவைகளின் செலவு

### 3.1 வட்டி, கட்டணங்கள் மற்றும் சொந்த மூலங்களிலிருந்தான செலவுகள்

#### 3.1.1 வட்டி மற்றும் கட்டணங்கள்

அ.குறிப்பிட்டதொரு நேரத்தில், குறிப்பிட்டதொரு அடிப்படையில் அத்தகைய வீதங்களில் வங்கிக்குச் சேரவேண்டிய பணத்தின் மீதான வட்டியை வாடிக்கையாளர் வங்கியுடன் எழுத்தில் இணங்கிக் கொள்ளப்பட்டவாறு காலத்திற்கு காலம் செலுத்துதல் வேண்டும்.

ஆ. வாடிக்கையாளர், கோரிக்கையினை அடுத்து உடனடியாக வங்கிக்குச் செலுத்த வேண்டும் அல்லது திருப்பிசெலுத்த வேண்டுமென்பதுடன் சட்ட நடவடிக்கை தொடர்பான செலவு உட்பட, வாடிக்கையாளருடன் வங்கி மேற்கொண்ட ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் முன்னரேயே வங்கிக்கு அறிவித்திருப்பினும் சரி அல்லது இல்லையெனினும் சரி வங்கியினால் கூறப்பட்ட அனைத்துச் செலவுகள், கட்டணங்கள், சொந்தச் செலவுகள் மற்றும் ஏனைய செலவுகளையும் வாடிக்கையாளர் கணக்கில் பற்று வைப்பதற்கு வங்கி உரித்துடையதாகும்.

இ. வாடிக்கையாளர்களினால் செலுத்தப்பட வேண்டும் எனத் தேவைப்படுத்தப்படும் வங்கியின் வட்டி வீதங்கள், கட்டணங்கள், விதிப்புக்கள் மற்றும் தரகுகள் பற்றிய தகவல்கள் வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள ஏதேனும் விசேட நன்மைகள் தொடர்பான குறிப்புடன் சேர்ந்து, கம்பனியின் வலைத்தளத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள வங்கியின் தீர்வைத் தாளில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

#### 3.1.2 கணிக்கின்ற முறை

வங்கியின் வட்டியைக் கணிக்கும் சூத்திரம் பின்வருமாறு:

கணிப்பானது வங்கியின் அனைத்துச் சொத்துக்கள் மற்றும் பொறுப்பு முழுவதிலும் இசைவானதாகக் காணப்படும். இச்சூத்திரமானது வாடிக்கையாளர்களுக்கான அறிவித்தலுடன் காலத்திற்குக் காலம் மாற்றப்படலாம் அல்லது திருத்தப்படலாம்.

மீதி அடிப்படை “வட்டி வீதம்/100” வட்டி அடிப்படை.

வட்டி அடிப்படை நாணயத்தினை பொறுத்ததாகும். உதாரணமாக இலங்கை ரூபா உண்மையானது/உண்மையான ஐ.அ.டொலர் உண்மையானது/360ஆகும்.

### 3.1.3. செலுத்தப்படாதுள்ள தொகை மீதான வட்டி

உரிய நேரத்தில் செலுத்தப்படாத தொகையின் மீது அல்லது முன்கூட்டிய உடன்பாடு ஏதுமில்லாத மேலதிக எடுப்பனவுத் தொகை மீது உயர்ந்த வட்டி வீதத்தினை விதிப்பதற்கு வங்கி அதன் தற்றுணிபின் அடிப்படையில் உரித்துடையதாகும் என்பதுடன் அத்தகைய வட்டி, வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு காலத்திற்குக் காலம் கூட்டு வட்டியாக்கப்படலாம்.

### 3.1.4 மாறுகின்ற வட்டி வீதம்

மாறுகின்ற வட்டி வீதக் கடன்களைப் பொறுத்த வரையில், வட்டி வீதம் தொடர்பான உடன்படிக்கையின் நியதிகளுக்கிணங்க சீராக்கப்படும். எழுத்தில் வேறுவிதமாக இணங்கப்பட்டிருந்தாலொழிய, வங்கிச் சேவைகளுக்கான கட்டணங்களை அறிவித்ததுடன் வங்கி மாற்றிக் கொள்ளலாம்.

### 3.1.5 வரிகள் மற்றும் ஏனைய தீர்வைகள்

வாடிக்கையாளர்களுடன் வங்கியினால் மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்கள் மீது செலுத்தப்படக்கூடிய அரசினால் விதிக்கப்படும் வரிகள், தீர்வைகள் மற்றும் ஏனைய விதிப்புக்கள் தொடர்பான அனைத்துப் பிரயோகங்கள் தொடர்பிலும் வாடிக்கையாளர்கள் வங்கிக்கு அத்தொகையினை மீளச்செலுத்துவதற்குப் பொறுப்புடையவராவர்.

## 4. பிணை

### 4.1 பிணையினைக் கோருவதற்கான வங்கியின் உரிமை

வங்கிக்கான வாடிக்கையாளரின் ஏதேனும் பொறுப்புக்களுக்காக அவசியமானது எனக் கருதுகின்ற எந்தவொரு நேரத்திலும் (ஒன்றில் தற்போதைய, எதிர்கால, முதிர்ச்சியடையாத, நிபந்தனையுடன் கூடிய மற்றும் எதிர்பாராதவை, இதில் எதுவாயினும்) பிணையினை வழங்குமாறு வாடிக்கையாளரைக் கோருவதற்கானஉரிமையினை வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

### 4.2 பிணையினைத் தேறல் செய்தல்

வாடிக்கையாளர் ஏதேனும் தொகையினைச் செலுத்தத் தவறுமிடத்து அல்லது செலுத்தாது விடுவது அல்லது காசுப் பாதுகாப்பினை அல்லது பிணையினைச் செலுத்தத் தவறுமிடத்து அப்பொழுது, வாடிக்கையாளர்களினால் வங்கிக்குச் சேரவேண்டிய ஏதேனும் எதிர்பாராத அல்லது மற்றைய கடப்பாடுகள் உண்மையில் முதிர்ச்சியைக் கொண்டனவாக இருப்பின், வங்கி வாடிக்கையாளருக்கான

அறிவித்தலுடன் பொருத்தமானது எனக் கருதும் வங்கியின் உண்மையான தற்றுணிபு நியதிகளில் பொருத்தமானதொரு விதத்தில் வாடிக்கையாளரின் ஏதேனும் சொத்தினை (ஏதேனும் நாணய மாற்றலைச் செய்வது உட்பட) விற்கலாம், தேறல் செய்யலாம் அல்லது அகற்றிவிடலாம். விற்பனை செய்தல், தேறல் செய்தல் அல்லது அகற்றிவிடுதல் தொடர்பில் உறப்படும் அனைத்துக் கட்டணங்களும் வாடிக்கையாளரினால் செலுத்தப்படுதல் வேண்டும். விற்பனை செய்தல் அல்லது அகற்றுதல் தொடர்பில் மேலே சொல்லப்பட்ட அதிகாரத்தினைப் புரிகின்றமை தொடர்பில் ஏற்படுகின்ற ஏதேனும் இழப்புக்களுக்காக ஒன்றில் வங்கியோ அல்லது அதன் எவரேனும் முகவர்களோ எம்வழியிலேனும் பொறுப்பாகமாட்டார்கள் என்பதுடன் வங்கி, அத்தகைய விற்பனை அல்லது அகற்றுதல் தொடர்பில் அதனால் பணிக்கமர்த்தப்பட்ட எவரேனும் தரகர், ஏலதாரர், முகவர் அல்லது எவரேனுமாளின் நடவடிக்கை அல்லது தவறுகளுக்குப் பொறுப்பாகவும் மாட்டாது.

ஏதேனும் விற்பனை அல்லது அகற்றுதல் மற்றும் முன்னைய கோரல் தொடர்பான அனைத்துச் செலவுகள், கட்டணங்கள் அத்துடன் ஏனைய பகிர்ந்தளிப்புக்களின் கொடுப்பனவிற்குப் பின்னர் காணப்படும் தேறிய பெறுகைகள் வாடிக்கையாளரினால் வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டியுள்ள அல்லது செலுத்தப்பட வேண்டியதாக மாறுகின்றவற்றின் கொடுப்பனவுகளுக்குப் பயன்படுத்தப்படும்.

புரியக்கூடியதாக மாறியுள்ள விற்பனை அல்லது அகற்றுதல் அதிகாரம் வங்கியில் எவனேனும் அலுவலர்களினால் செய்யப்படும் கூற்றொன்று அத்தகைய உண்மைக்கு உறுதியான சான்றாக அமையும்.

## 5. பற்றுறுதியும் எதிரீடு செய்தலும்

### 5.1 பற்றுறுதி மற்றும் எதிரீடு செய்தல் மீதான உடன்படிக்கை

#### 5.1.1 பற்றுறுதி

வாடிக்கையாளரும் வங்கியும், வங்கியின் உடமைக்குள் வந்திருக்கும் அல்லது வரக்கூடிய வங்கிப் பற்றுறுதியொன்றினை அத்துடன்/ அல்லது வாடிக்கையாளரின் ஏதேனும் பிணையங்கள் மற்றும் சொத்துக்கள் மீதான ஏதேனும் பிணை உரிமையினைக் கையேற்பது தொடர்பில் இணங்கிக் கொள்வர்.

#### 5.1.2 எதிரீடு செய்வதற்கான உரிமை

பொருத்தமான எந்தவொரு நேரத்திலும் அதன் பின்னர் அனைத்து நேரங்களிலும் வாடிக்கையாளரின் வரவில் தற்போதுள்ள அனைத்துப் பணங்களை அல்லது அதன் பின்னர் வரக்கூடிய பணத்தினை அல்லது இன்னும் வரவேண்டிய அல்லது

வாடிக்கையாளருக்கு வங்கியினால் செலுத்தப்பட வேண்டிய நிலையான வைப்புக் கணக்கு, சேமிப்புக் கணக்குகள், நடைமுறைக் கணக்குகள், வைப்புச் சான்றிதழ்கள் அல்லது வேறு ஏதேனும் கணக்குகள், வேறு ஏதேனும் வகையிலான அல்லது அத்தன்மையினைக் கொண்ட வங்கியுடனான கொடுக்கல்வாங்கல்கள், கடன்கள், வரவுகள், முற்பணங்கள் அல்லது ஏனைய அபராதம் தொடர்பான உதவிகள், வாடிக்கையாளருக்கு வங்கியினால் வழங்கப்பட்ட அல்லது வழங்கப்படவுள்ள உதவிகள் மற்றும் வங்கித்தொழில் வசதிகள் மற்றும் வங்கிக்கு வாடிக்கையாளர் செலுத்த வேண்டிய கடன் சுமைகள் மற்றும் பொறுப்புக்களின் பேரில் வங்கிக்கு தற்பொழுது இன்னும் செலுத்த வேண்டிய அனைத்துப் பணங்கள் இதன் பின்னர் வங்கிக்குச் செலுத்த வேண்டியதாக மாறும் பணங்கள் எதிரீடு செய்வதற்கு வாடிக்கையாளர் தமதுசம்மதத்தையும் அதிகாரத்தினையும் வங்கிக்கு வழங்குவதாகும். இங்கே, குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக வாடிக்கையாளர் அத்தகைய நடவடிக்கையினை மேற்கொள்ள அல்லது வங்கியினால் கேட்டுக் கொள்ளப்படுகின்றவாறான அத்தகைய ஆவணங்களில் கையொப்பமிடப் பொறுப்பேற்றுக் கொள்கிறார்.

### 5.1.3 உரிமைகளை நடைமுறைப்படுத்தல்

உரிமைகளை எதிரீடு செய்வதற்கு அல்லது பற்றுறுதி செய்வதற்கு அல்லது இத்தால் உருவாக்கப்பட்ட ஒதுக்கீடுகள் தொடர்பில் வங்கிக்குச் சேரவேண்டிய பணக் கொடுப்பனவுகளுக்கு வாடிக்கையாளர் அங்கீகாரங்களை வழங்குகிறார்.

## 6. நடைமுறைக் கணக்குகள்

நடைமுறைக் கணக்கு மீதிகளின் மீது வட்டி அனுமதிக்கப்படமாட்டாது.

காசோலைப் புத்தகங்கள் பெயரளவுக் கட்டணங்களில் வழங்கப்படுவதுடன் வேறு ஏதேனும் வடிவங்களில் செய்ய எதிர்பார்க்கப்படும் எடுப்பனவுகளைக் கொடுப்பனவுகளை மறுப்பதற்கான உரிமையினையும் வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

காசோலைகளைப் பயன்படுத்தும் விடயத்தில் பின்வருவன தொடர்பில் வாடிக்கையாளர்கள் மிகுந்த கவனத்தினைச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்:

அ)வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட காசோலைப் புத்தகத்தினைக் கையாள்வதில் வாடிக்கையாளர் அசட்டையீனமாக அல்லது வேறு ஏதேனும் விதத்தில் பயன்படுத்திக் கொண்டதன் மூலம் போலியாக கையொப்பமிடப்பட்ட/ கையொப்பங்களிடப்பட்ட காசோலைக்கு கொடுப்பனவுகளைச் செலுத்துகின்ற சந்தர்ப்பத்தில் வங்கி பொறுப்பெதனையும் கொண்டிருக்காது.

ஆ) காசோலையின் மீதான கையெழுத்துக்கள், வங்கியின் உடமையிலிருக்கும் மாதிரி கையெழுத்து அட்டையில் காணப்படும் மாதிரிக் கையொப்பத்தினை ஒத்ததாக இருத்தல் வேண்டும்.

இ) எடுப்பனவு செய்யப்படுகின்ற தொகை காசோலையில் சொற்களிலும் அதேபோன்று எண்களிலும் எழுதப்படல் வேண்டும் என்பதுடன் எண்கள் சாத்தியமானளவிற்கு அச்சிடப்பட்ட முறையே 'Rupees'மற்றும் 'Rs.' இற்கு நெருக்கமாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

ஈ) காசோலையில் மாற்றங்கள் ஏதாவது செய்ய வேண்டியது அவசியமானதாக மாறும் போது அத்தகைய மாற்றங்கள் வரைந்தவரின் முழுக் கையொழுத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

உ) கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கும் காசோலைத் திகதி ஆறு மாதங்கள் அல்லது அதற்கும் கூடுதலான திகதியைத் தாங்கியிருக்குமாயின் அக்காசோலையினைச் செலுத்துவதற்கு வங்கி மறுக்கலாம்.

ஊ) பிற்திகதியிடப்பட்ட காசோலையொன்று கவனமில்லாமல் செலுத்தப்பட்டு வாடிக்கையாளரின் கணக்கில் பற்று வைக்கப்படும் சந்தர்ப்பத்தில் வங்கி எந்தவொரு பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ளாது. பிற்திகதியிடப்பட்ட காசோலை என்பது, கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற காசோலை அதற்குப் பின்னரான திகதியொன்றினைக் கொண்டிருப்பதாகும்.

'தேறல் செய்யப்படாத விடயங்களுக்கு எதிராக வரையப்பட்ட காசோலைகளை' வங்கி ஏற்றுக்கொள்ளாது. 'தேறல் செய்யப்படாத விடயம்' என்பதன் பொருள் மற்றைய வங்கிகள், வர்த்தக இல்லங்கள், அரச அலுவலகங்களிலிருந்தான வங்கிக் கொடுப்பனவுகளைத் தேறல் செய்யாத காசோலை அல்லது கட்டளைஎன்பதாகும், அத்துடன் அவை வாடிக்கையாளர் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருக்க மாட்டா.

காசோலை சமர்ப்பிக்கப்படும் நாளன்று வைப்புச் செய்யப்படுகின்ற நிதியங்கள் செலுத்தப்படாததன் காரணமாக ஏதேனும் காசோலை திருப்பப்படுமாயின் அதற்கு வங்கியினை பொறுப்பாளியாக்கமாட்டார்

எவரேனும் வாடிக்கையாளரினால் வரையப்பட்ட காசோலைகளின் மொத்தத் தொகை எந்தவொரு நேரத்திலும் எந்தவொரு சூழ்நிலையிலும் வாடிக்கையாளர் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள தொகையினை மீளப்பெறுவதற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள தொகை விஞ்சக்கூடாது. காசோலைத் தொகையினை ஈடுசெய்யக்கூடிய தொகையினை வரையாத வாடிக்கையாளர்களுடனான அனைத்து வியாபாரத் தொடர்புகளையும் வங்கி முடிவுறுத்தலாம்.

இவ்விதிகளுக்கும் இத்தருணத்தில் நடைமுறையிலுள்ள வங்கியின் விதிகளுக்கும் மாறாக வரையப்படும் ஏதேனும் காசோலைகளுக்கான கொடுப்பனவினை மறுப்பதற்கான உரிமையினை வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

காசோலையொன்றின் கொடுப்பனவு பற்றிய முன் உத்தரவு இரத்துச் செய்யப்படும் போது கணக்குடமையாளர்:

அ)சமர்ப்பிப்பின் போது காசோலைக்கான கொடுப்பனவினை மேற்கொள்ளாமையினால் வங்கிக்கு ஏற்படும் ஏதேனும் இழப்பிற்கெதிராக நட்டஈட்டினைச் செலுத்துதல் வேண்டும்.

ஆ) காசோலை/காசோலைகள் கண்டறியப்பட்டால் அல்லது அழிக்கப்பட்டிருந்தால் அல்லது கொடுப்பனவினை நிறுத்தும் கட்டளை இரத்துச் செய்யப்படுவதாயின் அது பற்றி வங்கிக்குச் சரியான விதத்தில் எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

இ) கவனக் குறைவினால் அல்லது தவறுதலாக அல்லது விடயம் பற்றிய தவறான வழிகாட்டலின் காரணமாக வங்கியினால் விடயம் செலுத்தப்படுமாயின் அல்லது உறுதிப்படுத்தப்பட்டிருக்குமாயின் வங்கி பொறுப்பினைக் கொண்டிருக்காது.

ஈ) கொடுப்பனவினை நிறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படும் காசோலை தொடர்பான சரியான தகவல்களை உள்ளடக்கிய எழுத்து மூலமான கோரிக்கை இருந்தாலொழிய, முன் உத்தரவினை இரத்துச் செய்தல் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. முன் உத்தரவினை இரத்தச் செய்தலும் எழுத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன் இரத்துச் செய்தல் பெறப்பட்ட நேரத்திற்கும் கொடுப்பனவு நிறுத்தப்பட்ட காசோலை சமர்ப்பிக்கப்படும் நேரத்திற்குமிடையில் நியாயமான நேரம் கழியும் வரை நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படாது. கொடுப்பனவினை நிறுத்தும் கட்டளையொன்று எழுத்தில் புதுப்பிக்கப்பட்டாலொழிய அது ஆறு மாதத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும். காசோலையொன்றின் கொடுப்பனவினை நிறுத்துவதற்காக வாடிக்கையாளரினால் செய்யப்படும் ஒவ்வொரு கோரிக்கைக்கும் வங்கிக் கட்டணமொன்றினை (வங்கியின் பணிப்புரையில் நிர்ணயிக்கப்பட்ட) விதிக்கும்.

வைப்புச் செய்யப்பட்ட காசோலை தொடர்பான வரவுப் பதிவுகளை வங்கி மேற்கொள்ளலாமெனினும் அவ்வாறு ஏதேனும் காசோலைகள் தேறல் செய்யப்படாத போது அடுத்துவரும் வணிகத்திகதியில் அவற்றினை இரத்துச் செய்வதற்கான தற்றுணிபு வங்கிக்கு உண்டு.

வங்கி ஒவ்வொரு நடைமுறைக் கணக்கினையும் காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்து கணக்கினை பராமரிப்பதற்காக கட்டணமொன்றினையும் விதிக்கும். நிதி இல்லாமையின் காரணமாக செலுத்தப்படாது திருப்பப்படும் காசோலைகள் மீது வங்கி தரகொன்றினை விதிக்கும்.

காலத்திற்குக் காலம் வங்கியினால் குறித்துரைக்கப்படும் குறைந்தபட்ச மீதியினைப் பேணுமாறு வாடிக்கையாளர் வேண்டும்.

இதனகத்துப் பின்னர் குறிப்பிடப்படுகின்ற விடயங்களைப் பொறுத்தவரை, வங்கி, வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட விடயங்களின் சேகரிப்பிற்கான வாடிக்கையாளரின் முகவராக மாத்திரமே செயற்படும். ஒன்றில் தீர்வகத்தினூடாக அல்லது வேறு விதத்தில் வரையும் வங்கியிலிருந்து அல்லது வேறு ஏதேனும் கொடுப்பனவு நிறுவனத்திற்கு அஞ்சல் மூலம் அல்லது வேறு விதத்தில் பரிவர்த்தனை செய்யப்படும் அல்லது கொண்டு செல்லப்படும் அத்தகைய அனைத்து விடயங்கள் தொடர்பில் ஏற்படும் முழு இடர்நேர்வுகளுக்கும் வாடிக்கையாளரே பொறுப்பாவார். சர்வதேச ரீதியாக ஏற்படக்கூடிய தவறான நடவடிக்கைகள் அல்லது வங்கியின் அல்லது அதன் அலுவலர்களின் தவறுகளின் காரணமாக நேரடியாக ஏற்படுகின்ற இடர்நேர்வுகள் தவிர, எந்தவொரு சூழ்நிலையிலும் பொருட்களுக்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதங்களுக்கு வங்கி பொறுப்பாகமாட்டாது என்பது புரிந்து கொள்ளப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

அவ்வாறு வைப்புச் செய்யப்பட்ட காசோலைகள் மற்றும் ஏனைய சாதனங்களின் பெறுகைகளைப் பொறுத்தவரை வங்கியினால் கொடுப்பனவுகள் பெறப்படும் வரை வாடிக்கையாளரின் கணக்கிற்கு வரவு வைக்கப்படமாட்டாது. எனினும், சேகரிப்பு விடயமொன்றின் தொகையினை வங்கி வாடிக்கையாளர் கணக்கில் உடனடியாக வரவு வைக்குமாயின், அவ்வாறு தேறலுக்கு முன்னதாக வரவு வைக்கப்பட்ட சாதனம் மறுக்கப்படுமாயின் அவ்வாறு வரவு வைக்கப்பட்ட தொகையை வாடிக்கையாளர் மீளச்செலுத்துவதற்குப் பொறுப்புடையவராவர்.

அனைத்து விடயங்களினதும் சேகரிப்பினையும் பொறுத்தவரை, வங்கியினால் செலுத்தப்பட்ட அல்லது உறப்பட்ட ஏதேனும் கட்டணங்கள் வாடிக்கையாளரின் கணக்கிற்கானதாக அல்லது அவரின் கணக்குச் சார்பானதாக இருத்தல் வேண்டும்.

சேகரிப்பிற்காக வைப்புச் செய்யப்பட்ட காசோலைகள் அல்லது வேறு ஏதேனும் விடயங்கள் மறுக்கப்பட்டமைக்கான அறிவித்தலை வங்கி பெற்றுக்கொண்டதும் சாத்தியமானளவிற்கு விரைவாக வங்கி வழங்குதல் வேண்டும்.

சேகரிக்கும் வங்கியாளர் என்ற ரீதியில் சேகரிப்பிற்காக வாடிக்கையாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் காசோலை, உண்டியல், உறுதிப்பத்திரம், வரைவு, பங்குலாபம், ஆவணப்பத்திரம் அல்லது வேறு ஏதேனும் சாதனங்கள் தொடர்பில் ஏதேனும் ஒப்புதல்களுக்கு அது உத்தரவாதம் அளித்தமைக்காக, ஆற்றிய கடமை அல்லது கடமைகளின் காரணமாக வங்கிக்கு ஏற்படக்கூடிய இழப்பு அல்லது பாதிப்பிற்காக வாடிக்கையாளர் இழப்பீட்டினை வழங்குதல் வேண்டுமென்பதுடன் வங்கியினால் வழங்கப்பட்ட அத்தகைய ஒவ்வொரு உத்தரவாதமும் ஒவ்வொரு

விடயத்திலும் வாடிக்கையாளரின் கோரிக்கையின் பேரிலேயே மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

வங்கியுடன் முன்கூட்டியே எழுத்து மூலமான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலொழிய, தற்காலிகமாகக் கூட கணக்குகளில் மேலதிக எடுப்பனவுகள் மேற்கொள்ளப்படக்கூடாது. கணக்கு மேலதிக எடுப்பனவினைக் கொண்டதாக மாறுமிடத்து, வாடிக்கையாளர் வங்கியினால் நிர்ணயிக்கப்படவுள்ள வீதத்தில் எடுப்பனவுத் தொகையின் மீது வங்கியின் வழமையான வேலை நேரத்தில் வட்டியைச் செலுத்த வேண்டியிருக்கும்.

இங்கே நிதியம் தொடர்பாகக் காணப்படும் குறிப்பு, காசோலை வரையப்பட்ட கணக்கொன்றின் வரவு மீதியாக அத்துடன்/ அல்லது அதன் மீது வங்கியினால் வழங்கப்பட்ட கொடுகடன் வசதி தொடர்பானதாக மாத்திரம் இருக்கும்.

ஒன்றில் வாடிக்கையாளரினால் அல்லது வங்கியினால் கணக்கொன்று மூடப்படுவதனைத் தொடர்ந்து வாடிக்கையாளருக்கு முன்னர் வழங்கப்பட்ட அனைத்துக் காசோலைகளும் பயன்படுத்தப்படாது எஞ்சியுள்ளவைகளும் வங்கியின் சொத்துக்களாக இருத்தல் வேண்டுமென்பதுடன் வாடிக்கையாளர் இவற்றைத் திருப்பி ஒப்படைத்துவிடவும் வேண்டும்.

வெற்றுக் காசோலைகள் தொலைந்து விடுமாயின் அது பற்றி வாடிக்கையாளர் உடனடியாக வங்கிக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

இங்கே எடுத்துக்காட்டப்பட்டுள்ள ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, அநேக காசோலைகள் அல்லது உண்டியல்களின் மொத்தத் தொகை கிடைக்கத்தக்க நிதியத்தின் தொகையினை விஞ்சுகின்ற அவை சமகாலத்தில் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பத்தில் வங்கி, எடுப்பனவு செய்யப்பட்ட கணக்கில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியத்திலிருந்து செலுத்தப்படத்தக்க காசோலைகளை அல்லது உண்டியல்களைத் தெரிவுசெய்து கொள்வதற்கான உரித்தினைக் கொண்டிருக்கும்.

வாடிக்கையாளரின் மற்றைய அனைத்துக் கணக்குகளிலும் உள்ளதைப் போன்றே நடைமுறைக் கணக்கிலுள்ள நிதியமும் வாடிக்கையாளரின் வங்கிக்கான தற்போதைய அல்லது எதிர்காலக் கடப்பாடுகளுக்கான பிணையமாக இருப்பதுடன் அத்தகைய கடப்பாடுகளை வாடிக்கையாளர் செலுத்தத் தவறும் பட்சத்தில் வங்கி வாடிக்கையாளருக்கு எவ்வித அறிவித்தலுமின்றி, வாடிக்கையாளருடன் அத்தகைய கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அத்தகைய நிதியினைப் பயன்படுத்தலாம் என்பதுடன் இதன் பிணையாக ஏற்கனவே வரையப்பட்ட காசோலைகளின் கொடுப்பனவுகள் மறுக்கப்படும்.

கிளைவாசகம் 7 இலுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகள் காசோலைப் புத்தகத்தின் அட்டையில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் கொடுப்பனவுப் பற்றுச்சீட்டுக்கள் மற்றும் காசுப் பற்றுச்சீட்டுக்கள் மற்றும் ஏனைய வங்கியின் நிபந்தனைகள் மற்றும் விதிகளுக்கு மேலதிகமானவையாகும்.

இலங்கை அரசாங்கத்தின் சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் மற்றும் இலங்கையிலுள்ள வங்கிகளுக்கான பொதுவான வழமையான நடைமுறை மரபுகளும் நடவடிக்கை முறைகளும் வங்கியினால் திறக்கப்பட்ட நடைமுறைக் கணக்குகளுக்கும் ஒவ்வொரு கணக்குகளின் வரவு தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட விடயங்களின் தேறல்களுக்கும் பிரயோகத்தை கொண்டிருக்கவும் ஆளுகையும் செய்யும்.

## 7. சேமிப்பு கணக்குகளுக்கான விதிகள்

வங்கியினால் அறிவிக்கப்படக்கூடிய அத்தகைய வீதத்தில் வட்டி வீதம் நாளாந்தக் கடன் நிலுவைகளின் மீது அனுமதிக்கப்படும் என்பதுடன் அவை மாதாந்த அடிப்படையில் வைப்பாளரின் கணக்கிற்கு வரவு வைக்கப்படும்.

வட்டி காலத்திற்கு காலம் வங்கியினால் தீர்மானிக்கப்படும் சராசரி கொடுகடன் நிலுவையின் மீது வட்டி அனுமதிக்கப்படுவதில்லை.

சராசரி நிலுவை, வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட சராசரி குறைந்தபட்ச நிலுவைக்கு கீழே வீழ்ச்சியடையுமிடத்து வட்டியைச் செலுத்த மறுப்பதற்கான முழுமையான தற்றுணிபினை வங்கி கொண்டிருக்கும்.

வைப்புச் செய்வதற்காக ஏற்றுக்கொள்ளப்படும் அனைத்துக் காசோலைகளும் ஏனைய நாணயச் சாதனங்களும் இறுதிக் கொடுப்பனவிற்கு உட்பட்டே வரவு வைக்கப்படுகின்றன. அடுத்துவரும் காலப்பகுதியில் செலுத்தப்படாதனவாக மாறுகின்ற விடயங்களைக் கொண்ட வாடிக்கையாளர் கணக்குகளுக்கு விதிப்புக்களை மேற்கொள்வதற்கான உரிமையினை வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

## 8. கால வைப்புக் கணக்குகள்

முதலான அல்லது அதனைதொடர்ந்த வைப்புக்களின் காலப்பகுதியில் வைப்பினையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ வைப்பாளருக்கு விடுவிப்பதற்கான கடப்பாட்டினை வங்கி கொண்டிருக்காது.

வைப்புக்களை மேற்கொள்ளும் நேரத்தில் வைப்பாளருக்கு/ வைப்பாளர்களுக்கு வங்கியினால் வழங்கப்படும் கால வைப்புச் சான்றிதழ்களை மாற்றல் செய்யமுடியாது.

வைப்பின் முதிர்ச்சிக் காலம் முடிவடைந்ததன் பின்னர் வட்டி ஒன்று சேரமாட்டாது.

மாறாக, வைப்பின் ஏதேனும் தவணைக் காலம் முடிவடைவதற்கு குறைந்தபட்சம் ஏழு வேலைநாட்களுக்கு முன்னதாக வங்கிக்கு வைப்பாளர்/வைப்பாளர்களினால் எழுத்து மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தாலொழிய, அவ்வாறு செய்வதற்கு வங்கி கடப்பாடெதனையும் கொண்டிருக்காத போதும், கால வைப்புக்களை அட்டுறு வட்டி ஏதுமிருப்பின் அது உள்ளடங்கலாகவோ/உள்ளடங்காமலோ (விடயத்தினைப் பொறுத்து) மேலுமொரு காலப்பகுதிக்கும மற்றும் அடுத்துவரும் காலப்பகுதிக்கும் அல்லது ஒவ்வொரு காலமும் முடிவடைந்ததும் அத்தகைய வைப்புக்களைப் புதுப்பிப்பதற்கான உரிமையினையும் அதிகாரத்தினையும் வங்கி கொண்டிருப்பதுடன் இங்கே உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் வங்கியினால் காலத்திற்குக் காலம் விரித்துரைக்கப்படுகின்ற அத்தகைய ஏனைய நிபந்தனைகளுக்கும் (வட்டி வீதம் மற்றும் எடுப்பனவு செய்யப்படும் காலம் உட்பட) உட்பட்டு அதன் ஏக தற்றுணிபுக்கும் வசதிக்குமேற்ப அத்தகைய வைப்புக்களை வைத்துக்கொள்ள அல்லது வைப்பிலிட முடியும்.

வைப்புக் கணக்கொன்றினைத் திறப்பதற்குத் தேவையான குறைந்தபட்ச வைப்புத் தொகையினை வங்கி குறிந்துரைக்கலாம்.

வைப்பு வைப்பிலிடப்படக்கூடிய குறைந்தபட்ச காலத்தினை வங்கி குறித்துரைக்கும். அத்தகைய குறைந்தபட்ச காலம் முடிவடைவதற்கு முன்னதாக வங்கியின் சம்மதத்துடன் வாடிக்கையாளர் வைப்பினை மீளப்பெறும் சந்தர்ப்பத்தில் வாடிக்கையாளரின் இணக்கத்துடன் வங்கி அத்தகைய வைப்பின் மீதான வட்டிக் கொடுப்பனவினைப் பிடித்துவைத்துக் கொள்ளும்.

மேற்குறிப்பிட்ட விடயங்களெல்லாம் இருப்பினும் கூட, முதிர்ச்சிக்கு முன்னர் மீளப்பெறுகை இடம்பெறும் சந்தர்ப்பத்தில் ஏதேனும் வைப்புக்களுக்காக இணங்கிக் கொள்ளப்பட்ட வட்டியைக் குறைத்துக் கொள்வதற்கான தற்றுணிபினை வங்கி கொண்டிருக்கும்.

கால வைப்பொன்றிற்கு எதிராக வாடிக்கையாளர் கடன் வசதிகளைப் பெற்றிருக்குமிடத்து, வாடிக்கையாளர் வைப்பின் ஆரம்ப வைப்புக் காலம் முடிவடைவதற்கு முன்னதாக அதனை முடிவுறுத்துவதற்கும் அத்தகைய கொடுகடன் வசதிகளின் கணக்கின் மீது வங்கிக்குச் சேரவேண்டியதும் கொடுபட வேண்டியதுமான அத்தகைய நிலையான வைப்பிற்கெதிரான அனைத்துப் பணத்தினையும் எதிரீடு செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரமளிப்பார்.

## 9. கூட்டுக் கணக்குகள்

கணக்கொன்று கூட்டுக் கணக்காக இருக்கின்ற சந்தர்ப்பத்தில், கூட்டுக் கணக்கு உடமையாளர்கள் ஏதேனும் மேலதிகப் பற்றுக் கடன்வசதிகள் அல்லது அத்தகைய ஏதேனும் கணக்குகளுக்கு வழங்கப்பட்ட கடன், அல்லது வசதி அத்தகைய கணக்கிற்கு வழங்கப்படும் வசதிகளுக்கு அனைத்து வட்டி, தரகுகள் மற்றும் ஏனைய வங்கித்தொழில் கட்டணங்கள் மற்றும் செலவுகளுக்கு கூட்டாகப் பலவாகவும் பொறுப்புடையவர்களாக இருத்தல் வேண்டும்.

கணக்கொன்று கூட்டுப்பெயர்களில் இருக்குமிடத்து, எவரேனும் கூட்டுக் கணக்கு உடமையாளரொருவர் இறந்துவிடும் சந்தர்ப்பத்தில், அத்தகைய கணக்கில் எஞ்சியுள்ள கணக்குடமையாளர்/ கணக்குடமையாளர்கள் அத்தகைய கணக்கின் உடமையாளர்/ உடமையாளர்களாகவும் அத்தகைய கணக்கிற்கு அல்லது அத்தகைய கணக்கிலுள்ள பணத்திற்கான வட்டிக்கு உரித்துடையவராகவும் வங்கியினால் நடத்தப்படுவார். இதன்படி, தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் எது எப்படியிருப்பினும் அத்தகைய கணக்கிலுள்ள பணம் உயிர்வாழும்கணக்குடமையாளருக்கு/உடமையாளர்களுசெலுத்தப்படுதல வேண்டும்.

கூட்டுக் கணக்கு உடமையாளர்களுக்கு ஏதேனும், தேவையான அறிவித்தல் கொடுக்கப்பட வேண்டுமாயின் அது பிரதான கணக்குடமையாளருக்கு முகவரியிடப்படுதல் வேண்டும்.

## 10. விசேட திட்டங்கள், முன்னுரிமையுடன் நடத்தப்படுதல் மற்றும் சிறப்புரிமைகள்

வங்கி குறிப்பிட்ட வாடிக்கையாளர்களுக்கு விசேட திட்டங்களை அறிமுகப்படுத்தலாம் மற்றும் முன்னுரிமை வசதிகளையும் சிறப்புரிமைகளையும் வழங்கலாம். அத்தகைய முன்னுரிமை நடவடிக்கைகள் அத்துடன்/ அல்லது சிறப்புரிமைகள் அத்தகைய வாடிக்கையாளரின் கணக்கு மீதிகள் அல்லது வங்கியின் ஏக தற்றுணிபிற்கிணங்க காலத்திற்குக் காலம் வங்கியினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஏனைய பிரமாணங்களையும் அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படலாம். முன்னுரிமை வசதிகள் அல்லது சிறப்புரிமைகள் கணக்கு மீதிகளின் அடிப்படையில் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்குமிடத்து (ஒன்றில் வரவு அல்லது பற்று அல்லது வரவு மற்றும் பற்று மீதிகளின் இணைந்த தொகை) காலத்திற்குக் காலம் வங்கியினால் குறித்துரைக்கப்படும் குறைந்தபட்சத் தொகைக்கு கீழே அத்தகைய மீதிகள் வீழ்ச்சியடைவதனைத் தொடர்ந்து அத்தகைய சிறப்புரிமைகளும் முன்னுரிமை வசதிகளும் இரத்துச் செய்யப்படலாம். வங்கி எந்தவொரு நேரத்திலும் அத்தகைய சிறப்புத் திட்டங்கள், முன்னுரிமை வசதிகள் அத்துடன்/ அல்லது சிறப்புரிமைகளைப் புறக்கீடு செய்தமைக்கு எந்தவொரு காரணத்தினையும் வாடிக்கையாளருக்கு தெரிவிக்காமலேயே அதனை மேற்கொள்வதற்கான ஏக தற்றுணிபினையும் கொண்டிருக்கிறது.

## 11. பல்வகை விடயங்கள்

வங்கி கணக்குகளைத் திறப்பதற்கும் தொழிற்படுத்துவதற்குமான தகைமைப் பிரமாணங்களை எந்தவொரு நேரத்திலும் குறித்துரைப்பதற்கான தற்றுணிபினைக் கொண்டிருக்கிறது.

வாடிக்கையாளர் அதிகாரமளிக்கப்படாத நோக்கங்களுக்காக, மற்றைய தரப்பினர்களினால் பயன்படுத்தப்படாதிருப்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டு ஏதேனும் கணக்குகள் அத்துடன்/ அல்லது கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான தகவல்களும் (உதாரணமான வாடிக்கையாளரின் கையொப்பம்) ஆவணங்களும் (உதாரணமாக காசோலைகள்) சரியான முறையில் பேணப்பட்டு பாதுகாக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக வாடிக்கையாளர் கவனிப்பினை உறுதிப்படுத்தல் வேண்டும். வாடிக்கையாளர் அவரின் கணக்குகள், தகவல்கள் அல்லது ஆவணங்கள் ஏதேனும் அதிகாரமளிக்கப்படாத சந்தேகத்திற்குரிய விதத்தில் பயன்படுத்தப்படுவதாக அறியவரின் வாடிக்கையாளர் அது பற்றி வங்கிக்குச் சரியான முறையில் அறிவித்தல் வேண்டும் என்பதுடன் இப்பொதுவான நிபந்தனைகள் தொடர்பில் வங்கி நியாயமான முறையில் கேட்டுக் கொள்கின்றவாறு அதற்கிணங்க நடந்துகொள்வதுடன் ஆவணங்களில் கையொப்பமிடுதலும் வேண்டும். போலிக் கையொப்பங்கள் அல்லது சாதனங்களின் மற்றைய பாகங்களில்செய்யப்படும் மாற்றங்களின் நியாயமான காரணங்களினால் வங்கிகளின் கணக்குகளில ˙செலாவணி உண்டியல பற்று வைக்கப்படுமிடத்து வங்கி இவற்றுக்குப் பதிலாக வாடிக்கையாளர் கணக்கில் பற்றுக்களை மேற்கொள்ளலாம்.

குறிப்பிட்டதொரு தருணத்தில் வாடிக்கையாளரினால் வங்கிக்குச் சேரவேண்டிய தொகை மற்றும் பொறுப்புக்களாக (நாணயம்/நாணயங்கள் உட்பட) அல்லது ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள்/தொடர்புகளுடன் தொடர்புபட்ட ஏதேனும் விடயங்களுக்காக வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால்/அலுவலர்களினால் வழங்கப்பட்ட அறிக்கையொன்று அல்லது சான்றிதழ்கள், உண்மையில் தவறுகளைக் கொண்டிருக்காதவிடத்து அது இறுதி முடிவாக இருக்க வேண்டுமென்பதுடன் வாடிக்கையாளரைப் பிணித்தலும் வேண்டும்.

வாடிக்கையாளரினால் செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் தொகைக்காக வங்கி கொடுப்பனவுகளையும்பெறுமிடத்தும், அத்தகைய கொடுப்பனவு தொடர்பில் வங்கிக்குச் சேரவேண்டிய அத்தகைய தொகை எந்த நாணயத்திலிருக்க வேண்டுமோ அந்நாணயத்தினை விட வேறாக இருக்குமிடத்து (''கணக்கின் நாணயம்'') வங்கி எந்தவொரு நேரத்திலும் அத்தகைய கொடுப்பனவினை கணக்கின் நாணயத்திற்கு அத்தகைய நியதிகளிலும் வீதங்களிலும் வங்கியின் தீர்மானத்திற்கேற்ப மாற்றிக்கொள்ளலாம் என்பதுடன், இதன் விளைவாக, எந்தவொரு நேரத்திலும் வங்கிக்கு ஏற்பட்ட அனைத்து இழப்புக்கள், கிரயங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பில்

வாடிக்கையாளர் இழப்பீட்டினை வங்கிக்கு முழுமையாகச் செலுத்துதலும் வேண்டும். நாணயக் கணக்கில் வங்கி ஒன்றில் ஏதேனும் தீர்ப்பு அல்லது நீதிமன்றக் கட்டளை அல்லது வேறு ஏதேனும் விதத்தில் கொடுப்பனவினை முழுமையாகப் பெற்றிருந்தாலொழிய, கொடுப்பனவு செய்யப்பட்டமை தொடர்பில் கொடுப்பனவுகள் எதனையும் வழங்கக்கூடாது என்பதுடன் ஏதேனும் கொடுப்பனவின் அளவு மேலே குறிப்பிடப்பட்ட நாணயக் கணக்கின் மாற்றலினைப் பொறுத்து இருக்க வேண்டுமென்பதுடன், நாணயக் கணக்கிற்கு மாற்றப்பட்ட தொகை நாணயக் கணக்கில் தெரிவிக்கப்பட்ட அத்தகைய தொகையை விடக் குறைவாக இருக்குமிடத்து வங்கி எஞ்சியுள்ள தொகையினை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

## 12. முறைப்பாட்டு நடைமுறை

வாடிக்கையாளர் எந்தவொரு முறைப்பாட்டையும் வங்கிக்கு வாய்வழி மூலமோ அல்லது எழுத்திலோ அனுப்பி வைக்கலாம்.

அனைத்து வாய்வழி மூலமான அல்லது எழுத்து மூலமான முறைப்பாடுகளும் அத்தகைய முறைப்பாடுகளை பெறுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆளான முகாமையாளர், வாடிக்கையாளர் அனுபவம், அல்லது ஏதேனும் அலுவல்சார் வெளியீடுகளில் அல்லது வங்கி அறிவித்தல்களில் பெயரிடப்பட்டுள்ள எவரேனும் ஆட்களுக்கு அல்லது அடையாளம் காணப்பட்டவருக்கு முகவரியிடப்படல் வேண்டும். வாடிக்கையாளர் மேலதிகத் தகவல்கள் பற்றி அறிந்து கொள்ள விரும்புவாராயின் பின்வரும் விதத்தில் தொடர்பு கொள்ளமுடியும். www.nationstrust.comஅல்லது 24 மணி நேர அழைப்பு மையம்: +94114711411 ஊடாக தொடர்பு கொள்ளலாம்.

மேலும்,வாடிக்கையாளர் வங்கியின் ஏதேனும் சாதனம் தொடர்பான நன்மைகள் தொடர்பில் ஏதேனும் முறைப்பாடுகளைக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் முறைப்பாடு தொடர்பான அறிவித்தலை உள்ளடக்கிய எழுத்து மூலமான சுருக்கமான அறிக்கையொன்றை முகாமையாளர், வாடிக்கையாளர் அனுபவம், நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சி, 46/58 இநவம் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது வங்கியை +9743565656 இல் அல்லது வாடிக்கையாளர் மின்னஞ்சல் சேவையான customerservice@nationstrust.com இல் தொடர்பு கொள்ளமுடியும். முறைப்பாடு கிடைக்கப்பெற்றதும் அதனைப் பெற்றவர் அத்தகைய முறைப்பாட்டினை வாடிக்கையாளர் சேவை நிலையம்/முறைப்பாடுகள் முகாமைத்துவ முறைமை ஊடாக முறைப்பாட்டினை தாக்கல் செய்வதன் மூலம் அத்தகைய முறைப்பாடு வங்கியின் வாடிக்கையாளர் அனுபவக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

இணங்கப்பட்ட இலங்கை சேவை உடன்படிக்கைக்குள் தீர்மானங்களை வழங்குவதற்காக அனைத்து முறைப்பாடுகளும் கண்காணிக்கப்பட்டு வங்கியின் வாடிக்கையாளர் அனுபவக் குழுவினால் சரியான முறையில் பின்தொடரப்படுதல் வேண்டும்.

முறைப்பாடு செய்யப்பட்ட நாளிலிருந்து இருபத்தொரு (21) நாட்காட்டி நாட்களுக்குள் முறைப்பாடு தொடர்பில் வங்கி வாடிக்கையாளருக்குப் பதிலிறுத்தல் வேண்டும். இக்காலப்பகுதிக்குள் முறைப்பாடு தொடர்பான விசாரணையினை வங்கியினால் முடித்துவைக்க முடியாமல் போகுமிடத்து, வங்கி அத்தகைய இருபத்தொரு (21) நாள் கலண்டர் காலப்பகுதிக்குள் வாடிக்கையாளருக்கு இடைக்காலப் பதிலிறுப்பொன்றினை வழங்குவதுடன்,உயர்ந்தபட்சம் 3 மாத காலப்பகுதி என்ற வரையறைக்குட்பட்டு இறுதிப் பதிலிறுப்பினை வங்கி வாடிக்கையாளருக்கு மீண்டும் வழங்கும் திகதியை அறிவிக்கும்.

முறைப்பாட்டினை வங்கி சட்டபூர்வமாக நிறைவு செய்யும் சந்தர்ப்பத்தில், வங்கியானது அத்தகைய பதிலிறுப்பில் முறைப்பாட்டினை தீர்த்து வைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை வாடிக்கையாளருக்கு அறிவிக்கும்.

வாடிக்கையாளரிடமிருந்து வாய்வழி மூலமாகப் பெறப்படும் முறைப்பாடுகளுக்கு வாய்வழி மூலமாக அல்லது எழுத்து மூலமாக வங்கி பதிலிறுத்தும். வாடிக்கையாளரிடமிருந்து எழுத்து மூலம் பெறப்படும் முறைப்பாடுகளுக்கு வங்கியினால் எழுத்து மூலம் பதிலளிக்கப்பட வேண்டும்.

அனைத்து முறைப்பாடுகளுக்கும் முறைப்பாடு பெறப்பட்ட மொழியிலேயே பதிலிறுத்தப்படும்.

வங்கி தொடர்பில் எழுப்பப்படும் ஏதேனும் கரிசனைகளுக்கு வாடிக்கையாளரைத் திருப்திப்படுத்தும் விதத்தில் தீர்வு காண்பதற்கு வங்கி எப்பொழுதும் முன்னுரிமை வழங்கும். அதேவேளையில் வாடிக்கையாளரும் நிதியியல் ஆலாட்சி அதிகாரியின் அலுவலகத்திற்கு அல்லது இலங்கை மத்திய வங்கிக்கு எழுதுவதன் மூலம் நிவாரணத்தைத் தேடிக் கொள்ளமுடியும்.

நிதியியல் ஆலாட்சி அதிகாரியின் அலுவலகம் - இலங்கை

நிதியியல் சேவைகள் ஆலாட்சி அதிகாரியின் அலுவலகம், 2002 சித்திரையில் முன்னெடுக்கப்பட்ட நிதியியல் துறை சீர்திருத்தப் பொதியின் ஒரு பகுதியாக நிறுவப்பட்ட சுயாதீனமான பாரபட்சமற்ற, இலவச சேவையொன்றாகும்.நிதியியல் ஆலாட்சி அதிகாரியை தொடர்பு கொள்வதற்கான விபரங்களை அறிந்துகொள்ள அதன் www.financialombudsman.lkஎன்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தை பார்வையிடுங்கள்.

இலங்கை மத்திய வங்கி(CBSL)

நிதியியல் சேவைகள் தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகளுக்காக வாடிக்கையாளரால் இலங்கை மத்திய வங்கிக்கு அதனை அனுப்பி வைக்க முடியும். அது தொடர்பான விபரங்களை அறிந்துகொள்ளல் மற்றும் தகவல்களை அனுப்பும் முறைகளை அறிந்துகொள்ள அதன் இணையத்தளத்தை பார்வையிடவும்: https://www.cbsl.gov.lk

## 13. அறவிடல் செயற்பாடுகள் மற்றும் பறிமுதல் செய்யும் நடவடிக்கைகள்

13.1 அறவிடல் நடவடிக்கையினை வங்கியொன்று வாடிக்கையாளர் அவரின்/அவளின் கடப்பாடுகளை புரியத் தவறும் சந்தர்ப்பத்தில் வங்கியினால் பின்வருமாறு தொடரப்படுகிறது:

அ.வங்கி முதன் முதலில் வாடிக்கையாளரைத் தொடர்பு கொண்டு வாடிக்கையாளரிடமிருந்து வரவேண்டிய தொகையினை அறவிட முயற்சிக்கும்.

ஆ.வரவேண்டிய தொகையினை இத்தகைய முறையில் அறவிட வங்கி தவறும் சந்தர்ப்பத்தில், வங்கி வாடிக்கையாளரிடமிருந்து வரவேண்டிய தொகையினை அறவிடுவதற்கு வெளியிலிருந்து பணிகளை வழங்குபவர்களின் உதவியை நாடமுடியும்.

இ. இச்சந்தர்ப்பத்தில் வங்கி வாடிக்கையாளரிடமிருந்து வரவேண்டிய தொகையினை அறவிடத் தவறுமாயின் வங்கி வாடிக்கையாளருக்கெதிராக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம்.

### 13.2 வாடிக்கையாளரிடமிருந்து மீளளிப்பு செய்யப்படக்கூடிய வங்கியின் செலவினங்கள்

வாடிக்கையாளருக்கெதிராக வங்கி சட்ட நடவடிக்கைகளைத் தொடருகின்ற சந்தர்ப்பத்தில் இந்நடவடிக்கைகள் தொடர்பாக வங்கியினால் உறப்படும் அனைத்துச் செலவுகளும் விசாரணைகள், பிரசுரங்கள் மற்றும் அறவிடல் தொடர்பில் உறப்படும் மற்றைய செலவுகளையும் வாடிக்கையாளரிடமிருந்து வங்கி கோரமுடியும்.

### 13.3 கடன், மேலதிகப் பற்று அல்லது ஏதேனும் கொடுகடன் வசதிகளுக்கான பிணையுறுதியாக வைக்கப்பட்ட சொத்துக்களைப் பறிமுதல் செய்வதற்கு வங்கியினால் பயன்படுத்தக்கூடிய நடைமுறைகள்

கடன், மேலதிகப் பற்று அல்லது வேறு ஏதேனும் கொடுகடன் வசதிகளை வாடிக்கையாளரொருவர் செலுத்தத் தவறும் சந்தர்ப்பத்தில், கடன் அல்லது மேலதிகப் பற்று அல்லது அத்தகைய மற்றைய கடன் வசதிகளுக்கான (ஒன்றாக கடன் வசதிÆ கடன் வசதிகள்) பிணையுறுதியாக வைத்திருக்கப்பட்ட சொத்துக்களைச் சுவீகரிப்பதற்குப் பின்வரும் நடைமுறைகளை வங்கி தொடர முடியும்.

### 13.3.1 பராட்டே நிறைவேற்றல்

அ) கொடுகடன் வசதித் தொகை ரூ.5 மில்லியனுக்கு மேற்பட்டதாக (அல்லது ஏற்புடைத்தான சட்டங்கள் அல்லது ஒழுங்குவிதிகளின் மூலம்குறித்துரைக்கப்பட்டவாறான வேறு ஏதேனும் தொகை) இருக்குமிடத்து வங்கிப் பணிப்பாளர் சபை தீர்மானமொன்றினை நிறைவேற்றி பத்திரிகை வெளியீடொன்றினை மேற்கொள்வதன் மூலம் பகிரங்க ஏலம் வாயிலாக (பராட்டே நிறைவேற்றல்) சொத்தினை விற்பதற்கு நடவடிக்கைகளை எடுக்க முடியும். வங்கி பராட்டே நடவடிக்கையினைப் பின்பற்றாமல் மாற்று ஏற்பாடொன்றாக, இதனகத்துப் பின்னர் விபரமாகத் தரப்பட்டுள்ள ஈட்டு முறி நடவடிக்கை முறையின் கீழ் ஈட்டு முறியினை நடைமுறைப்படுத்துவதற்கு நீதிமன்றத்தில் வாடிக்கையாளருக்கெதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

ஆ) வங்கி பராட்டே நடவடிக்கை முறையின் கீழ் நடவடிக்கைகளை மேற்கொண்டு ஏலத்தில் மூன்றாந்தரப்பினரொருவர் சொத்தினைக் கொள்வனவு செய்திருப்பின் வங்கி விற்பனைப் பெறுகைகளிலிருந்து கொடுகடன் வசதியின் மீது செலுத்தப்பட வேண்டிய வெளிநிற்கும் தொகை மற்றும் அதனுடன் தொடர்பான செலவுகள் மற்றும் கட்டணங்களை அறவிட்டதன் பின்னர் எஞ்சியுள்ள தொகையினை (ஏதுமிருப்பின்) வாடிக்கையாளருக்குச் செலுத்தும்.

இ) ஏலத்தின் போது சொத்தினைக் கொள்வனவு செய்வதற்கு கொள்வனவாளர் எவரும் இல்லாத சந்தர்ப்பத்தில் 1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க (திருத்தப்பட்டவாறான) வங்கிகளின் கடன் அறவிடல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வலுவளிக்கப்பட்டவாறு பெயரளவு கொடுப்பனவிற்காக வங்கி அதன் பெயரின் கீழ் சொத்தினைச் சுவீகரிக்கும்.

ஈ) சொத்தினைச் சுவீகரித்ததன் பின்னர் வங்கி அதன் தற்றுணிபிற்கேற்ப சொத்தினை மீளவிற்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும். மீள்விற்பனையின் பின்னர் வங்கிவிற்பனைப் பெறுகைகளிலிருந்து தொடர்பான கொடுகடன் வசதியின் மீது செலுத்தப்பட வேண்டிய வெளிநிற்கும் தொகை மற்றும் அதனுடன் தொடர்பான செலவுகள் மற்றும் கட்டணங்களை அறவிட்ட பின்னர் எஞ்சியுள்ள தொகையினை (ஏதுமிருப்பின்) வாடிக்கையாளருக்குச் செலுத்தும்.

### 13.3.2 ஈட்டு முறி நடவடிக்கை

அ) கொடுகடன் வசதித் தொகை ரூ.5 மில்லியனுக்குக் குறைவாக இருப்பின் (அல்லது ஏற்புடைத்தான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான வேறு ஏதேனும் தொகை) ஈட்டு முறியினை நிறைவேற்றுவதற்காக நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கையொன்றினைத் தொடுத்து பகிரங்க ஏலம் ஒன்றின் மூலம் சொத்தினை ஏலத்தில் விற்பதற்கு நீதிமன்ற கட்டளையினை நாடும்.

ஆ) ஏலத்தின் பின்னர், வங்கி விற்பனைப் பெறுகைகளிலிருந்து கொடுகடன் வசதியின் மீது செலுத்தப்பட வேண்டிய வெளிநிற்கும் தொகையினை அறிவிட்ட பின்னர் எஞ்சிய தொகையினை (ஏதுமிருப்பின்) வாடிக்கையாளருக்குச் செலுத்தும்.

### 13.4 இது தொடர்பில் வாடிக்கையாளருக்கு ஏற்படக்கூடிய விளைவுகள் மற்றும் அவருக்கு/அவளுக்குள்ள தேர்வுகள்

மேலே குறிப்பிடப்பட்ட ஏதேனும் கட்டத்தில், வெளிநிற்கும் கொடுகடன் வசதியையும் ஈட்டினை வலுவுக்கிடுவதில் வங்கிக்கு ஏற்பட்ட செலவினையும் தீர்ப்பனவு செய்வதற்கு வாடிக்கையாளர் அனுமதிக்கப்படுவார். அத்தகைய வெளிநிற்கும் தொகையினை வங்கிக்கு தீர்ப்பனவு செய்த பின்னர், வங்கி, பிணையுறுதியாக வைக்கப்பட்டிருந்த சொத்தினை வாடிக்கையாளருக்கு விடுவிக்கும்.

## 14. கைவிடப்பட்ட சொத்துக்கள் மற்றும் உறங்கும் கணக்குகள் மீதான கொள்கைகளும் நடைமுறைகளும

### 14.1 கைவிடப்பட்ட சொத்துக்கள்

கைவிடப்பட்ட சொத்துக்கள் ஏதேனும் வங்கிக் கணக்கிலுள்ள மீதிகள் (நடைமுறை, சேமிப்பு, கால வைப்புக்கள் அல்லது வேறுவிதமானவை) மற்றும் ஏதேனும் வங்கித்தொழில் வசதிக்காக பிணையமாக வைக்கப்பட்டுள்ளவை தவிர்ந்த வங்கியில் வாடிக்கையாளரால் அல்லது வாடிக்கையாளரின் சார்பில் வைக்கப்பட்டுள்ள ஏதேனும் சொத்துக்கள் (பாதுகாப்புப் பெட்டகத்திலுள்ள விடயங்கள் போன்றவை) மற்றும் பத்தாண்டு காலத்திற்கு (10) கூடுதலாக கொடுக்கல்வாங்கல்கள் இடம்பெறாத விடயங்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

வருடாந்த அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் ஆறு (06) மாதங்களுக்குள் அத்தகைய கைவிடப்பட்ட சொத்து விபரங்களை நாணயச் சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான அத்தகைய படிவத்தில் இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்க வங்கி வேண்டியுள்ளது.

இலங்கை மத்திய வங்கிக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள், வங்கி சொந்தக்காரரின் பெயர் குறிப்பிட்ட சொத்து பற்றிய விபரங்களை உள்ளடக்கிய அத்தகைய கைவிடப்பட்ட சொத்துக்களின் பூரணமான பட்டியலை சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிப் பத்திரிகைகளில் வெளியிடுதல் வேண்டும்.

சமகாலத்தில், கைவிடப்பட்ட சொத்துக்களின் தொடர்பான சொந்தக்காரருக்கு அவர்களது இறுதியாக அறியப்பட்ட முகவரிக்கு அவர்களது கைவிடப்பட்ட சொத்தினைப் பற்றி அறிவித்து அத்தகைய சொத்துக்களைக் கோருவதற்கு நியாயமான காலப்பகுதியொன்றினையும் அவர்களுக்கு வழங்கும் விதத்தில் பதிவுத்தபால் மூலம் வங்கியினால்அறிவித்தல்கள் வழங்கப்பட வேண்டும்.

வாடிக்கையாளரினால் செல்லுபடியாகக்கூடிய கோரல் மேற்கொள்ளப்பட்டாலொழிய, வங்கி, வங்கியினால் நியாயமானதென தீர்மானிக்கப்பட்ட அத்தகைய காலப்பகுதியொன்றிற்குள்:

அ) உறங்கும் கணக்குகளில் இலங்கை நாணயத்தில் பேணப்பட்ட நிதிகளை இலங்கை மத்திய வங்கிக்கு மாற்றல் செய்ய வேண்டும் என்பதுடன் வெளிநாட்டு நாணயத்தில் பேணப்பட்ட அத்தகைய நிதிகளை வங்கி தொடர்ந்தும் வைத்திருத்தல் வேண்டும்.

ஆ) பாதுகாப்புப் பெட்டகத்தினைத் திறந்து அதிலுள்ள பொருட்களை எடுத்தல் வேண்டும்.

வாடிக்கையாளர்கள் அடையாளத்தினை நிரூபிப்பதன் மூலம் எந்தவொரு நேரத்திலும் இலங்கை மத்திய வங்கிக்கு மாற்றல் செய்யப்பட்ட அத்தகைய நிதிகளைக் கோருவதற்கு உரித்துடையவராவர்.

பாதுகாப்பு பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த பொருட்கள், செல்லுபடியாகக்கூடிய கோரலை மேற்கொள்கின்ற காலம் வரை எவ்வித சேதமுமின்றி வங்கியின் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படல் வேண்டும்.

கைவிடப்பட்ட சொத்துக்களைக் கோருகின்ற வாடிக்கையாளரின் வாரிசுகளும் வழிவந்தோரும் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு அவர்களது கோரலுக்கு ஆதரவான ஆவணங்களை வங்கிக்குச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் தொடர்பில் வங்கிக்கு ஏற்படுகின்ற செலவுகளை வங்கி கைவிடப்பட்ட சொத்துக்களின் சொந்தக்காரர்கள் மீது விதிக்கும்.

## 14.2 உறங்கும் கணக்குகள் தொடர்பான கொள்கைகளும் நடைமுறைகளும்

- பின்வரும் காலப்பகுதிக்காக வாடிக்கையாளர் கணக்குகளில் எவ்வித செயற்பாடுகளையும் மேற்கொள்ளாத போது:

  நடைமுறைக் கணக்குகள் - 12 மாதங்கள்

  சேமிப்புக் கணக்குகள் - 24 மாதங்கள்

- வாடிக்கையாளருடன் தொடர்புகள் இல்லையென்ற காரணம் உட்பட வேறு ஏதேனும் காரணங்களுக்காக உறங்கும் வகைப்படுத்தல் பொருத்தமானது என வங்கி கருதுமாயின்அக்கணக்குகள் உறங்கும் கணக்குகள் எனக் கருதப்படும்.

எது எப்படியெனினும், வங்கியின் உள்ளகக் கொள்கைகள் அத்துடன்/ அல்லது ஏற்புடைத்தான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளைப் பொறுத்து, மேற்குறிப்பிடப்பட்ட காலப்பகுதி வங்கியினால் காலத்திற்குக் காலம் திருத்தப்படலாம்.

வங்கி உறங்கும் கணக்குகளை மீளச்செயற்படுத்துவதற்கு முன்னதாக வாடிக்கையாளர்களை நேர்கண்டு உறங்கும் அந்தஸ்து பற்றி தெளிவுபடுத்தலொன்றினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். வாடிக்கையாளர் அவ்வாறு கேட்டுக் கொள்ளப்படும் போது அத்தகைய தெளிவுபடுத்தல்களை வங்கிக்கு எழுத்து மூலம் வழங்குதல் வேண்டும்.

வங்கி அதன் தற்றுணிபின்படி, உறங்கும் கணக்குகளை மீளச் செயற்படுத்துவதற்கு முன்னதாக குறிப்பிட்டஆவணங்களை அதாவது வாடிக்கையாளரின் தேசிய அடையாள அட்டையின் பிரதி, கம்பனி பதிவுச் சான்றிதழ் போன்ற குறிப்பிட்ட ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு வாடிக்கையாளரைத் தேவைப்படுத்தலாம்.

கணக்கொன்று உறங்கும் கணக்காக வகைப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில், வங்கி அக்கணக்குகள் மீதான காசோலை வரைவுக் கொடுப்பனவு உள்ளிட்ட கொடுக்கல்வாங்கல்களை, அத்தகைய உறங்கும் நிலை நீக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் வங்கி திருப்திப்படும் வரை, அத்தகைய கணக்குகள் மீதான கொடுக்கல்வாங்கல்களை மறுப்பதற்கான உரிமையினைக் கொண்டுள்ளது.

## 15. 2006 ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்திற்கிணங்க நிதியியல் உளவறிதல் பிரிவிற்கான சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய விதிகள்

ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள், ஏதேனும் சட்டத்திற்கு மாறான நடவடிக்கைகள் அல்லது வேறு ஏதேனும் குற்றவியல் குற்றத்துடன் தொடர்புடையனவாக இருக்கக்கூடும் எனச் சந்தேகப்படுவதற்கு வங்கிக்கு நியாயமான காரணங்கள் இருக்குமிடத்து, அல்லது, வங்கிக்கு பணம் தூயதாக்கல், எவரேனுமாளினால் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் ஆட்களின் குழு அல்லது நிறுவனம் அல்லது ஏதேனும் புலன்விசாரணை அல்லது வழக்குத் தொடுப்பு தொடர்பில் ஏதேனும் உத்தேச சட்டத்திற்கு மாறான நடவடிக்கை அல்லது குற்றவியல் குற்றத்துடன் தொடர்பான தகவல்கள் காணப்படுமிடத்து அவற்றினை வங்கி உடனடியாக நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிவித்தல் வேண்டும்.

அத்தகைய அறிக்கைகளையும் உள்ளடக்க விபரங்களையும் நிதியியல் உளவறிதல் பிரிவினால் கேட்டுக்கொள்ளப்பட்டவாறு தயாரித்தல் வேண்டும்.

ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ள வேண்டாம் என நிதியியல் உளவறிதல் பிரிவு வங்கிக்குப் பணிக்கும் சந்தர்ப்பத்தில் வங்கி கொடுக்கல்வாங்கல்களை இடைநிறுத்தி தேவையான விசாரணைகளை மேற்கொள்ள நிதியியல் உளவறிதல் பிரிவினை அனுமதிக்க வேண்டும் என்பதுடன் சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் முகவர்களின் உதவியையும் பெற்றுக்கொள்ளும்.

இவ்விதிகளின் கீழ் வங்கியினால் எடுக்கப்படும் எந்த நடவடிக்கைகளையும் வாடிக்கையாளர் தெரிவிக்கப்பட வேண்டிய உரித்தினைக் கொண்டிருக்கவில்லை என்பதுடன் வங்கியினால் எடுக்கப்படுகின்ற ஏதேனும் அத்தகைய நடவடிக்கை தொடர்பில் வங்கி வாடிக்கையாளருக்குப் பொறுப்புக்கூறும் தன்மையினையோ பொறுப்பாண்மையினையோ எவ்விதத்திலும் கொண்டிருக்காது.

### 16. 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்திற்கிணங்க, நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு ஆரம்ப மட்டக் கொடுக்கல்வாங்கலுக்கு மேற்பட்ட தொகையினை அறிவிப்பது தொடர்பான விதிகள்

ஒழுங்குவிதிகளினால் குறித்துரைக்கப்பட்ட தொகையினை விஞ்சிய ஒவ்வொரு காசுக் கொடுக்கல்வாங்கலையும் இலத்திரனியல் நிதிய மாற்றல்களையும் வங்கி நிதியியல் உளவறிதல் பிரிவினால் விரித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய காலப்பகுதிக்குள் அத்தகைய படிவமொன்றில் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிக்கையிட வேண்டும் என வங்கி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அறிக்கையிடப்பட வேண்டும் எனத் தேவைப்படுத்தப்படும் இலத்திரனியல் நிதிய மாற்றல்கள் உள்முக மற்றும் வெளிமுகப் பணவனுப்பல்கள் ˙, இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு மாற்றல்கள், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை கொடுக்கல்வாங்கல்கள், கொடுகடன் அட்டைக் கொடுக்கல்வாங்கல்கள், பற்றுஅட்டைக் கொடுக்கல்வாங்கல்கள் (ஏற்புடையவிடத்து) மற்றும் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள் என்பன உட்பட, ஆனால் அதற்கு மட்டுமே மட்டுப்படுத்தப்படாதவைகள ஏதேனும் வகையில் மேற்கொள்ளப்பட்ட இலத்திரனியல் நிதிய மாற்றல்களை உள்ளடக்கி இருக்கும்.

இவ்விதிகளின் கீழ் வங்கியினால் எடுக்கப்படும் ஏதேனும் நடவடிக்கைகள் தொடர்பில் வங்கி வாடிக்கையாளர்களுக்கு கடப்பாட்டுடனோ அல்லது பொறுப்புடனோ இருப்பதற்கு வழியில்லை.

## 17. வங்கித்தொழில் இரகசியத்தன்மை

### 17.1 தனிப்பட்ட தரவுகள்

வாடிக்கையாளரின் எந்தவொரு தனிப்பட்ட தரவையும் வங்கி செய்முறைப்படுத்தல் இத்தால் குறிக்கப்பட்டு உள்ளடக்கப்பட்டுள்ள வங்கியின் பிரத்தியேகத் தன்மை தொடர்பான கொள்கையால் நிர்வகிக்கப்படும் என்பதை வாடிக்கையாளர் இதன் மூலம் ஒப்புக்கொள்கிறார். வங்கியின் பிரத்தியேகத் தன்மை தொடர்பான கொள்கை, வங்கி தனிப்பட்ட தரவைச் சேகரிக்கும். பயன்படுத்தும், பகிர்ந்து கொள்ளும் மற்றும் தக்கவைத்துக்கொள்ளும் கொள்கைகள். நடைமுறைகள் மற்றும் நோக்கங்களை விளக்குகிறது. கூறப்பட்ட பிரத்தியேகத் தன்மை தொடர்பான கொள்கை https://www.nationstrust.com/privacy-policy. இல் கிடைக்கும்.

17.2. தனிப்பட்டதல்லாத தரவுகள்

வாடிக்கையாளர் மற்றும்/அல்லது வாடிக்கையாளரின் பரிவர்த்தனைகள் அல்லது வாடிக்கையாளரின் கணக்கு(கள்) தொடர்பான எந்தவொரு தனிப்பட்டதல்லாத தரவுகளையும் வங்கி மற்றும்/அல்லது வங்கியின் கிளைகளுடன் வங்கி அவ்வப்போது தீர்மானிக்கும் நோக்கத்திற்காக அல்லது நோக்கங்களுக்காக வெளியிடுவதற்கு வாடிக்கையாளர் இதன் மூலம் வங்கிக்கு ஒப்புதல் அளித்து அங்கீகரிக்கிறார்.

17.3 பொருள்விளக்கம்

a)பிரிவு 17.1 இன் நோக்கத்திற்காக, ஒரு வாடிக்கையாளர் என்பவர் தனிப்பட்ட தரவுகள் தொடர்பாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அடையாளம் காணக்கூடிய ஒரு இயற்கையான நபரை (மனிதரை) மட்டுமே குறிக்கிறது. பிரிவு 17.1 சட்ட ஆட்களாகிய (அதாவது நிறுவனங்கள்) வாடிக்கையாளர்களுக்குப் பொருந்தாது.

b) “தனிப்பட்ட தரவுகள்” என்ற சொல், 2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் (திருத்தப்பட்டபடி) வழங்கப்பட்ட அதே பொருளைக் கொண்டுள்ளது.

## 18. முடிவுறுத்தல் மற்றும் இடைநிறுத்தல்

### 18.1 வாடிக்கையாளரின் முடிவுறுத்தல் உரிமை

வங்கியும் வாடிக்கையாளரும் முடிவுறுத்தல் ஏற்பாடுகளுக்கு வேறுவிதமாக எழுத்து மூலம் இணங்கிக் கொண்டாலன்றி, இங்கே உள்ளடக்கப்பட்டுள்ள மற்றைய ஏற்பாடுகளுக்கும் குறிப்பிட்ட உறவுமுறைகளை ஆளுகின்ற சிறப்பு நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, எந்தவொரு நேரத்திலும் வாடிக்கையாளர் வங்கியுடனான வியாபார உறவுகளை முழுமையாகவோ அல்லது வியாபார உறவுகளை ஏதேனும் குறிப்பிட்ட அளவிலோ முடிவுறுத்திக் கொள்வது பற்றி நியாயமான எழுத்து மூலமான முன்அறிவித்தலை வங்கிக்கு வழங்கலாம். எது எவ்வாறெனினும் அத்தகைய முடிவுறுத்தல் அத்தகைய முடிவுறுத்தலுக்கு முன்னர் வங்கி பெற்றுக்கொண்ட உரிமைகளை உரிமையினை பாதிக்காது.

### 18.2 நியாயமான காரணங்களுக்காக முடிவுறுத்தல்

வங்கியும் வாடிக்கையாளரும் தமக்கிடையேயான குறிப்பிட்ட வியாபார உறவுமுறைகளுக்காக நியதிகள் அல்லது முடிவுறுத்தல் ஏற்பாடுகளுக்கு மீது இணங்கிக் கொண்டிருப்பார்களாயின், அத்தகைய உறவுகளை அத்தகைய நியதிகள் அல்லது ஏற்பாடுகளுக்கிணங்கவே மட்டுமே முடிவுறுத்தப்படலாம்.

### 18.3 வங்கியின் முடிவுறுத்தல் உரிமைகள்

(அ) அறிவித்தலின் பேரில் முடிவுறுத்தல்
வங்கியின் அபிப்பிராயத்தின்படி நியாயமானதாக இருக்கும் அறிவித்தலொன்றினை வாடிக்கையாளருக்கு வழங்குவதன் பேரில் வங்கி எந்தவொரு நேரத்திலும் அதன் வாடிக்கையாளருடனான நியதிகளோ அல்லது முடிவுறுத்தல் ஏற்பாடுகளோ வங்கிக்கும் வாடிக்கையாளர்களுக்குமிடையில் எழுத்தில் இருக்காத வியாபார உறவுகளை முழுமையாகவோ அல்லது வாடிக்கையாளர்களுடனான குறிப்பிட்ட வியாபார உறவுகளை முடிவுறுத்திக் கொள்ளலாம். எனினும், ஏதேனும் அத்தகைய முடிவுறுத்தல், அத்தகைய முடிவுறுத்தலுக்கு முன்னர் வங்கி பெற்றுக்கொண்ட உரிமைகளை பாதிக்கக்கூடாது.

(ஆ) நிர்ணயிக்கப்பட்ட காலமெதுவும் இல்லாத கடன்கள் மற்றும் வசதிகளை முடிவுறுத்தல்ஒன்றில் நிலையான காலத்தினையோ அல்லது முடிவுறுத்தல் ஏற்பாடுகளையோ எழுத்தில் உடன்பட்டிராதகடன்கள் அல்லது கொடுகடன்கள் அல்லது வங்கித்தொழில் வசதிகள்/கடப்பாடுகளை வங்கியின் தற்றுணிபிற்கிணங்க எந்தவொரு நேரத்திலும் முடிவுறுத்தப்படலாம். எது எப்படியெனினும் அத்தகைய ஏதேனும் முடிவுறுத்தல், அத்தகைய முடிவுறுத்தலுக்கு முன்னர் வங்கி பெற்றுக்கொண்ட உரிமைகளை பாதிக்காது.

(இ) அறிவித்தல் இல்லாமல் நியாயமான காரணங்களுக்கான முடிவுறுத்தல்

அத்தகைய வியாபார உறவுமுறைகள் தொடர்வதனை ஏற்றுக்கொள்ள முடியாததாக்குகின்ற நியாயமான காரணங்கள் காணப்படுமாயின் வங்கி வாடிக்கையாளருடனான அதன் வியாபார உறவினை முழுமையாக அல்லது ஏதேனும் குறிப்பிட்ட உறவினை அறிவித்தல் இல்லாமல் முடிவுறுத்தலாம். எது எவ்வாறாயினும், அத்தகைய அத்தகைய முடிவுறுத்தலுக்கு முன்னர் வங்கி பெற்றுக்கொண்ட உரிமைகளை உரிமையினை பாதிக்காது.

(ஈ) முடிவுறுத்தலைத் தொடர்ந்து தீர்ப்பனவுகள்

மேலே குறிப்பிடப்பட்டவாறு வாடிக்கையாளருடனான வங்கியின் வியாபார உறவுமுறைகள் அல்லது வசதிகள் முடிவுறுத்தப்படுவதனைத் தொடர்ந்து வங்கிக்குச் சேரவேண்டிய வாடிக்கையாளரின் அனைத்துத் தொகைகளும் கடப்பாடுகளும் நிலுவைகளாக மாற்றுவதுடன் வங்கியினால் கோரப்படுகின்றவாறு உடனடியாக செலுத்தப்படுதலும் வேண்டும். அறிவித்தலொன்றுடன் வங்கிக்கும் வாடிக்கையாளருக்குமிடையிலான அனைத்து வெளிநாட்டுச் செலாவணி மற்றும் ஏனைய பெறுதிக் கொடுக்கல்வாங்கல்கள் அனைத்தையும் முடிவுறுத்துவதற்கு வங்கி உரித்தினைக் கொண்டிருத்தலுடன் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களின் கீழான மீதிகள் நிலுவைகளாக மாற வேண்டியதுடன் அதன் பின்னர் அப்போதைய சந்தைப் பெறுமதியில் வங்கியினால் தீர்மானிக்கப்பட்டவாறு அவை செலுத்தப்படுதலும் வேண்டும். வங்கிக்குச் சேரவேண்டிய வாடிக்கையாளரின் ஏதேனும் வெளிநின்ற முற்பேரங்கள் அல்லது எதிர்பாராத பொறுப்புக்களைப் பொறுத்தவரை வாடிக்கையாளர் உடனடியாக வங்கியினால் தேவைப்படுத்தப்படுகின்றவாறான நியதிகளின் மீது அவற்றை ஈடுசெய்வதற்குப் போதுமான காசினை உடனடியாக வழங்குதல் வேண்டும்.

## 18.4 கணக்கொன்றினை இடைநிறுத்துவதற்கான வங்கியின் உரிமை

18.4.1 பின்வரும் நிலைமைகளில், வங்கி, வாடிக்கையாளரொருவரின் ஏதேனும் கணக்கினை/கணக்குகளை இடைநிறுத்துவதற்கு, அல்லது முடக்குவதற்கு அத்துடன்/அல்லது கொடுக்கல்வாங்கல்களை தாமதிப்பதற்கு, தடுப்பதற்கு, முடக்குவதற்கு அல்லது மறுப்பதற்கான உரிமையினை தன்னகத்தே கொண்டுள்ளது.

(அ)சட்டத்திற்கிணங்க, வங்கி நீதிமன்றத்தின் கட்டளை, அல்லது அரசாங்கம்/ ஒழுங்குமுறைப்படுத்தல் சபை என்பனவற்றின் கட்டளைக்கிணங்க நடந்துகொள்வதற்காக

(ஆ) வாடிக்கையாளரின் வங்கி முறிவு பற்றி பிரகடனப்படுத்தப்படும் போது

(இ) வாடிக்கையாளர் கணக்கில் போதுமான நிதி இல்லாத போது

(ஈ) கணக்கிலுள்ள பணத்திற்கு யார் சொந்தக்காரர் அல்லது யார் பணத்தினைப் பயன்படுத்தலாம் என்ற தகராறு பற்றி வங்கிக்கு அறிவித்தல் வழங்கப்படுகின்ற போது

(உ) ஒன்றில் கணக்கிற்குரிய ஒருவரை அல்லது எல்லாத் தரப்பினர்களையும் வங்கியை அல்லது கணக்கிலுள்ள நலவுரித்துக்களின் நியாயமான கோரிக்கைகளைக் கொண்ட மூன்றாந்தரப்பினரையும் பாதுகாப்பதற்கு

(ஊ) எதிரீடு செய்து கொள்வதற்கும் வாடிக்கையாளரிடமிருந்து சேரவேண்டிய ஏதேனும் தொகையினைச்சேகரிப்பதற்குமான அதன் உரிமையினை வங்கி பயன்படுத்துவதன் பொருட்டு

(எ) வங்கியின் உள்ளகத் தொழிற்பாட்டுத் தேவைப்பாடுகளுக்காக (வரையறைகள் இல்லாமல், கொடுகடன் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம், முறைமை அல்லது சாதனங்களின் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல், காப்புறுதி, கணக்காய்வு மற்றும் நிருவாக ரீதியான நோக்கங்கள் உட்பட)

(ஏ) நிதியியல் குற்றங்கள் இடம்பெறுவதற்கான சாத்தியங்கள் பற்றி வங்கிக்குச் சந்தேகம் ஏற்படுமிடத்து அல்லது வாடிக்கையாளர் வங்கிக்குச் சாத்தியமான நிதியியல் இடர்நேர்வுகளை ஏற்படுத்தக்கூடிய தன்மைகள் காணப்படுமிடத்து

(ஐ)வங்கி அதன் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் இணங்குவிப்புக் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு (பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான விடயங்கள் உட்பட) அல்லது தொடர்புடைய இடர்களை கையாள

(ஒ) வங்கியின் உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அல்லது பாதுகாத்துக் கொள்வதற்க் அல்லது

(ஓ) இடைநிறுத்தல், தடுத்தல்/முடக்குதல் அல்லது தாமதித்தல் போன்றவை அவசியமானவை என வங்கிக்கு அதன் தற்றுணிபிற்கிணங்கக் கருதுகின்ற வேறு ஏதேனும் சூழ்நிலையில்.

18.4.2 அப்போது நிலவுகின் சூழ்நிலைகளின் அடிப்படையில், கணக்கொன்றினை இடைநிறுத்தும் முன்னறிவித்தலை வாடிக்கையாளருக்கு வழங்கும் நிலைமையில் வங்கி இல்லாதிருக்கலாம் என்பதனை வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கிறார். எவ்வாறெனினும் வங்கி அத்தகைய இடைநிறுத்தல் விதிக்கப்பட்டமை தொடர்பில் நியாயமான காலப்பகுதியொன்றிற்குள் அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.

மேலே குறிப்பிட்ட முறையில் வங்கி அதன் உரிமைகளை நிறைவேற்றுவதன் காரணமாக வாடிக்கையாளருக்கு ஏற்படுகின்ற இழப்புÆ சேதம் அல்லது உறப்படுகின்ற இழப்புக்களுக்கு வங்கி எவ்விதத்திலேனும் பொறுப்பாகமாட்டாது.

18.4.3. இப்பிரிவின் கீழான உரிமைகளை வங்கி காசோலைகள், கோரிக்கைகள் அல்லது எடுப்பனவுகளை மதிக்கத் தவறுதல் அல்லது மறுத்தல் அல்லது அத்தகைய உரிமையினை அல்லது அதிகாரத்தினை வங்கி புரிகின்ற அன்றோ அல்லது முன்னரோ வங்கியின் ஏதேனும் அலுவலகத்தின் மீது வாடிக்கையாளரினால் வரையப்பட்ட வேறு ஏதேனும் ஆவணங்கள் போன்றவற்றை மறுப்பது வரையிலான நடவடிக்கைகளுக்கும் வங்கி பயன்படுத்தலாம் என்பதுடன் வங்கியின் அத்தகைய நடவடிக்கைகளின் விளைவாக வாடிக்கையாளருக்கு ஏற்படும் இழப்புக்கள் தொடர்பில் வங்கிக்கெதிராக அனைத்துக் கோரல்களையும் அல்லது கோரிக்கைகளையும் வாடிக்கையாளர் மேற்கொள்ளலாம்.

## 19. வங்கி வழங்கும் தயாரிப்புகள் மற்றும் சேவைகளுடன் தொடர்புடைய அபாயங்கள்

வாடிக்கையாளர் சந்தை அபாயம் அவர்களின் நிதிநிலை மீது பெரிய தாக்கம் ஏற்படுத்தக் கூடியதாகும் என்பதை ஒப்புக்கொண்டு புரிந்துகொள்கிறார். வங்கி வழங்கும் தயாரிப்புகள் மற்றும் சேவைகள் குறித்து சிந்தித்து முடிவுகளை எடுக்க, இந்த அபாயங்களை தெளிவாகப் புரிந்துகொள்வது முக்கியம். கீழே குறிப்பிடப்பட்டுள்ள அபாயங்களை குறைப்பதற்கான மூலோபாயங்களாக, வளமிக்க பங்கீடு, ஒழுங்கான கையிருப்புப் பரிசீலனைகள்மற்றும் சந்தை நிலைமைகள் குறித்து தொடர்ந்து தகவல் பெறுதல் ஆகியவற்றைப் பயன்படுத்துவது வாடிக்கையாளருக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது. இவை அனைத்து சாத்தியமான அபாயங்களின் முழுமையான பட்டியல் அல்ல, ஆனால் பிரதிநிதித் உதாரணங்கள் மட்டுமே.

### அ) வட்டிவீத அபாயம்

வாடிக்கையாளர் வட்டிவீதத்தில் ஏற்படும் ஏற்ற இறக்கம் நிதிசார்ந்த சொத்துகள் மற்றும் கடன்களின் மதிப்பில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது என்பதை ஒப்புக்கொள்கிறார். பொதுவாக, வட்டிவீதம்அதிகரிக்கும்போது, இருப்புள்ள நிதிசார்ந்த சொத்துகளின் (எ.கா. கடன் பத்திரங்கள்) மதிப்பு குறையக்கூடும், மேலும் கடன்சேவைகள் பெறுவதற்கான செலவுகள் அதிகரிக்கக்கூடும். மாறாக, வட்டிவீதம் குறையும்போது, அதற்கு மாறான விளைவுகளை ஏற்படுத்தலாம். இந்த சந்தை நிலைகள், பொருளாதார நிலைமை பாதிக்கப்படும் காலங்களில் உட்பட, வாடிக்கையாளர் மொத்த முதலீட்டுத் தொகுப்பிற்கு குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

### ஆ) நாணய அபாயம்

வாடிக்கையாளர் வெளிநாட்டு சொத்து முதலீடுகள் அல்லது வெளிநாட்டு நாணயத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்து முதலீடுகள் மாற்று விகித ஏற்ற இறக்கங்களுக்கு உட்பட்டவை என்பதைக் கவனிக்கின்றார், இது வருமானத்தை பாதிக்கக்கூடும்.

வெளிநாட்டு நாணயத்தின் மதிப்பு முதலீட்டாளரின் சொந்த நாணயத்தின் ஒப்பிலிருந்து குறைந்தால், நாணய அபாயம் இழப்புகளை ஏற்படுத்தலாம். கூடுதலாக, நாணய மாற்று விகிதங்களில் ஏற்படும் மாற்றங்கள் கடன் கடிதங்களை முடிவுறுத்தல் போன்ற வங்கித் வசதிகளை மற்றும் இதர பொருத்தமான பரிவர்த்தனைகளை பாதிக்கக்கூடும்.

## இ) பங்குச் சந்தை அபாயம்

வாடிக்கையாளர் பங்குச் சந்தை விலைகளில் வீழ்ச்சி ஏற்படுவதால் இழப்பின் அபாயத்தை அறிவார். சந்தை வீழ்ச்சிகள் அல்லது தனிப்பட்ட நிறுவனங்களின் மோசமான செயல்திறன் பங்குகளில் முதலீடு செய்துள்ள நுகர்வோர் வழங்கும் சொந்த பங்குகளின் மதிப்பில் குறைவுக்கு காரணமாக இருக்கக்கூடும்.

## ஈ) கலைதல் அபாயம்

வாடிக்கையாளர், குறிப்பிட்ட முதலீடுகளை உடனடியாக விற்பனை செய்வதில் சிரமம் ஏற்படும் மற்றும் இதனால் அவற்றின் விலை பெரிய அளவிலான பாதிப்புகளுக்கு ஆளாகலாம் என்பதை ஒப்புக்கொள்கிறார். சந்தை அழுத்த நேரங்களில், இந்த சிக்கலானது அதிகரிக்கக் கூடுகிறது் உடனடி நிதிகளை அணுக வேண்டிய வாடிக்கையாளர்களுக்கு பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

## உ) மீள்முதலீடுகளில் அபாயம்

வாடிக்கையாளர் மீள்முதலீடுகளில் இருந்து வரும் வருமானம் அல்லது முதன்மை தொகைகளை அசல் முதலீட்டின் வட்டி விகிதங்களைவிட குறைவான வட்டி விகிதங்களில் புதுப்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டால், அதனால் வருமானம் குறைவாகக் கிடைக்கும் வாய்ப்பு உள்ளதாக வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கிறார்.

## ஊ) மாறுபாடு அபாயம்

வாடிக்கையாளர் சந்தை விலைகள் குறுகிய காலத்தில் முக்கியமான ஏற்ற இறக்கங்களை அனுபவிக்க முடியும் என்பதை ஒப்புக்கொள்கிறார். இந்த மாறுபாடு பங்கு, பிணைகள் மற்றும் ஒத்திசைவு நிதி போன்ற முதலீடுகளை பாதிக்கக்கூடியது, இது பெரிய இழப்புகள் அல்லது இலாபங்களுக்கு வழிவகுக்க வாய்ப்பு உள்ளது.

## எ) அமைப்பு தொடர்பான அபாயம்

வாடிக்கையாளர் பரவலான நிதி முறை குற்றச்சாட்டு அல்லது சந்தை சிக்கலின் அபாயத்தை ஒப்புக்கொள்கிறார், இது தனிப்பட்ட முதலீடுகளுக்கு மட்டும் அல்ல, வாடிக்கையாளர் கடன்களுடன் தொடர்புடையதாகவும் முக்கியமான இழப்புகளை ஏற்படுத்தலாம். அமைப்பு தொடர்பான அபாயம் நிதி நெருக்கடிகள், பொருளாதார

குறைபாடுகள் அல்லது உலகளாவிய நிகழ்வுகளால் ஏற்படலாம், இது முதலீடுகளின் மதிப்பையும் வாடிக்கையாளரின் கடன் போதனை நிறைவேற்றுவதற்கான திறனையும் பாதிக்கக்கூடும்.

### ஏ) அரசியல் மற்றும் பொருளாதார அபாயம்

வாடிக்கையாளர் அரசு கொள்கைகள், ஒழுங்குமுறை, அல்லது பொருளாதார சூழ்நிலைகள் மாறுவது சந்தை செயல்திறனை பாதிக்கக்கூடும் என்பதை ஒப்புக்கொள்கிறார், இது வாடிக்கையாளரின் முதலீடுகள் மற்றும் கடன்களை பாதிக்கக்கூடும். வர்த்தக கொள்கைகள், வரி சட்டங்கள் மற்றும் பொருளாதார தடைகள் போன்ற காரணிகள் முதலீடுகளை பாதிக்கவும், தளம்பல் நிலையினை உருவாக்கவும், மற்றும் முதலீடுகளின் மதிப்பையும், வாடிக்கையாளரின் கடன் ஒப்பந்தங்களில் உள்ள கடமைகளையும் பாதிக்கக்கூடும்.

### ஐ) கடன் அபாயம்

வாடிக்கையாளர் வங்கி தயாரிப்புகள் மற்றும் சேவைகளைப் பயன்படுத்துவதில் உள்ள அடிப்படையான கடன் அபாயத்தை அங்கீகாரம் அளிக்கிறார் மற்றும் ஒப்புக்கொள்கிறார். கடன் வசதியின் பொறுப்புக்களை உரிய நேரத்தில் தீர்ப்பது முக்கியமானது. கடன் வசதிகளை நேரத்தில் தீர்க்காமல் விட்டுவிட்டால், தண்டனை வட்டி மற்றும் கட்டணங்கள் ஏற்படும். வாடிக்கையாளர் வழங்கிய எந்தவொரு குத்தகையும் உரிய நேரத்தில் தீர்க்காதால், வங்கி சட்டபூர்வமாக மீள்பெயர்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், வாடிக்கையாளரால் வழங்கப்பட்ட பத்திரங்களை விலக்கு செய்யவும் உரிமை வைத்திருக்கிறது. கடன் வசதியின் தரவுகளை பின்பற்றாததை ஒப்பந்தத்திற்கு எதிரான மீறல் எனக் கருதப்படும். கடன் வசதிகளின் திருப்தியற்ற சேவையை ஊசுஜடீக்கு தெரிவிக்கப்படும், இது வாடிக்கையாளரின் கடன் சுயவிவரதிற்குக் கேடு உண்டு பண்ணக்கூடும். கூடுதலாக, மோசமான கடன் நடத்தை தற்போதைய வசதிகளுக்கு கட்டுப்பாடுகளை அல்லது எதிர்காலவசதிகளுக்கு தகுதியற்றதாக மாறும்.

### ஒ) செயல்பாட்டு அபாயம்

வாடிக்கையாளர் வங்கியின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளைப் பயன்படுத்துவதில் செயல்பாட்டு அபாயம் உள்ளதாக ஏற்றுக் கொள்ளுகிறார் மற்றும் ஒப்புக்கொள்கிறார். இந்த அபாயம் சேவைகளைத் தடுக்கும் மற்றும் நிதி இழப்புகளை ஏற்படுத்தும் பிழைகள், மோசடிகள் அல்லது அமைப்பு தோல்விகள் போன்றவற்றைக் குறிப்பிடுகிறது. குறிப்பாக, வாடிக்கையாளர் செயற்கை பாதுகாப்பு அபாயத்தை ஒரு முக்கிய கவலையாகக் கௌரவிக்கிறார், இதில் தனிப்பட்ட தகவல்களும் நிதி தரவுகளும் இணையத் தாக்குதல்களுக்கு உள்ளாகக்கூடியதாக உள்ளன, இதனால் அடையாளம் திருடல் அல்லது நிதி இழப்புகள் ஏற்படலாம். வாடிக்கையாளரை அவர்களின் தகவல்களைப்

பாதுகாக்கச் செயல்முறை வழிமுறைகளை கடைபிடிக்கவும், பாதுகாப்பான ஆன்லைன் வங்கியுடன் தொடர்புடைய செயல்பாடுகளைச் செய்யவும் ஆலோசிக்கிறோம். இவ்வாறான அபாயங்களின் விளைவாக ஏற்படும் இழப்புகளுக்கு வங்கியை பொறுப்பேற்க முடியாது, மேலும் வாடிக்கையாளரின் தனிப்பட்ட மற்றும் நிதி தரவுகளை பாதுகாப்பதற்கான உரிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளப் பொறுப்பு வாடிக்கையாளருக்கே ஆகும்.

## 20. பொறுப்பின் வரையறை

### 20.1 பொறுப்பின் வரையறைகள்

வங்கி அதன் கடப்பாடுகளை ஆற்றுகையில், அதன் அலுவலர்கள் சார்பில் வேண்டுமென்றே ஏற்படுகின்ற தவறுகளுக்கு அல்லது கடுமையான கவனயீனம் காரணமாக ஏற்படும் தவறுகளுக்கு மாத்திரம் பொறுப்புடையதாக இருத்தல் வேண்டும்.

### 20.2 மூன்றாந்தரப்பினர்கள் மீது சுமத்தப்படுகின்ற கட்டளைகள்

கட்டளையொன்றின் உள்ளடக்கங்கள் அல்லது கொடுக்கல்வாங்கல் வங்கி பொதுவாக நம்புகின்ற அல்லது அதன் மேலதிக நிறைவேற்றுதல்களுடன் நிலைமைக்கேற்றவாறு மூன்றாந்தரப்பினரை நம்புகின்ற தன்மையினைக் கொண்டிருக்குமாயின், வங்கி அதன் சொந்தப் பெயரில் மூன்றாந்தரப்பினருக்கு அவற்றை ஒப்படைப்பதன் மூலம் கட்டளைகளை அல்லது கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றும்.

### 20.3 வட்டி இழப்பு

கட்டளைகளின் நிறைவேற்றல் அல்லது அவை தொடர்பான ஆலோசனைகள் தொடர்பில் ஏற்படக்கூடிய இழப்பு தொடர்பில் ஏற்படுகின்ற தாமதம் அல்லது தவறான வழிநடத்தல் காரணமாக இழப்புக்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் வட்டி இழப்பிற்கு மாத்திரம் வங்கி பொறுப்பாக இருக்கும். நாணயத்தின் பெறுமதி அல்லது கொடுப்பனவு ஊடகத்தின் பெறுமதியில் வெறுமனே ஏற்படும் மாற்றங்களின் காரணமாக ஏற்படும் ஏதேனும் இழப்புக்களுக்கு வங்கி பொறப்பாகமாட்டாது.

## 21. இழப்பீடு

வாடிக்கையாளர் வங்கிக்கு ஏற்படக்கூடிய அல்லது பாதிக்கப்படக்கூடிய அனைத்துக் கோரல்கள், கோரிக்கைகள், நடவடிக்கைகள், சேதங்கள், பொறுப்புக்கள், கிரயங்கள், இழப்புக்கள், செலவுகள் மற்றும் வங்கி உறக்கூடிய அல்லது பாதிக்கக்கூடிய ஏனைய பணத் தொகைக்கெதிரான இழப்பீட்டினைச் செலுத்துதல் வேண்டும். எவ்வாறெனினும்,

இது தொடர்பில் அல்லது வாடிக்கையாளருக்கு கடன்களை அல்லது வேறு வங்கித்தொழில் வசதிகளை வழங்கியமை தொடர்பில் அல்லது வாடிக்கையாளர்களுக்கு வங்கித்தொழில் சேவைகளை ஆற்றியமை தொடர்பில் இங்கே தரப்பட்ட காரணங்களின் பொருட்டு வங்கியினால் உறப்பட்ட அத்தகைய கொடுப்பனவுகளை வங்கியின் கோரிக்கையினை அடுத்து வங்கிக்கு மீளச்செலுத்துதல் வேண்டும்.

## 22. எதிர்பாராத அனர்த்தங்கள்

கலகம், யுத்தம், இயற்கை அனர்த்தம், வங்கியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகள் அல்லது வங்கி பொறுப்பாக இருக்காத வேறு ஏதேனும் நிகழ்வுகள் ஐஅதாவது வேலை நிறுத்தம் நடமாடல் தடை, போக்குவரத்துச் சேவைகளின் நிறுத்தம், சமூக அமைதியின்மை, உள்நாட்டு அல்லது வெளிநாட்டு அரசாங்கம் அல்லது ஏனைய அதிகாரசபைகள் (உண்மைப்படியான அல்லது சட்டப்படியான) ஏதேனும் சட்டம் அல்லது ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடுகள், சந்தை இடையூறுகள், தீர்ப்பனவு, கொடுத்துத் தீர்த்தல் முகவர் அல்லது மத்திய வைப்பகம்ஸ என்பனவற்றின் நடவடிக்கைகள் உட்பட ஆனால் அவற்றுக்கு மட்டுமே வரையறுக்கப்படாதனவற்றை உள்ளடக்கிய எதிர்பாராத அனர்த்தங்களின் காரணமாக ஏற்படக்கூடிய ஏதேனும் நடவடிக்கைகளை ஆற்றுவதற்கு இயலாமல் போவதன் காரணமாக ஏற்படக்கூடிய ஏதேனும் இழப்புக்களுக்கு வங்கி பொறுப்பாகமாட்டாது.

## 23. தகவல்கள் மற்றும் அறிவித்தல்கள்

வாடிக்கையாளரின் பெயர், தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் (செல்லிடத் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி உட்பட) முகவரி மற்றும் வங்கியுடன் பதிவுசெய்யப்பட்டுள்ள ஏனைய விபரங்கள் என்பனவற்றில் ஏற்பட்ட ஏதேனும் மாற்றங்களை வாடிக்கையாளர் தாமதிக்காமல் வங்கிக்க அறிவித்தல் வேண்டும்.

வாடிக்கையாளர் தொடர்பான வர்த்தகம், வியாபாரம் அல்லது தொழில் மற்றும் நிதியியல் நிலைமைகள் அல்லது அவர் தொடர்பான பொருண்மிய மாற்றங்கள் தொடர்பிலான அனைத்து விபரங்களையும் வாடிக்கையாளர் வங்கிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

வாடிக்கையாளரின் நிதியியல் இயலாற்றலைப் பாதிப்பதற்கு வழிவகுக்கக்கூடிய ஏதேனும் வழக்காடல் அல்லது வழக்காடலுக்கான அச்சுறுத்தல்கள் பற்றிய விபரங்களை வாடிக்கையாளர் வங்கிக்கு வெளிப்படுத்தல் வேண்டும்.

வாடிக்கையாளரினால் செலுத்தப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகின்ற வங்கியின் வட்டி வீதங்கள், கட்டணங்கள், விதிப்புக்கள் மற்றும் தரகுகள் பற்றிய

தகவல்கள் வங்கியின் தீர்வைத் தாளில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். உசாவுகைக்காக இத்தகவல்கள் வாடிக்கையாளருக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள ஏதேனும் விசேட நன்மைகளுடன் சேர்த்து கம்பனி வலைத்தளத்தில் தரப்பட்டுள்ளன.

வேறுவிதமாக இணங்கப்பட்டாலான்றி, வட்டி வீதங்களின் திருத்தங்கள் கட்டணங்கள், விதிப்புக்கள், தரகுகள், விசேட நன்மைகள், சாதனங்களுடன் தொடர்பான மாற்றங்கள் (நியதிகள் மற்றும் நிபந்தனைகள் உட்பட) இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கான திருத்தங்கள் தொடர்பான அறிவித்தல்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்ட வேறு ஏதேனும் அறிவுறுத்தல்கள் (வங்கியின் கம்பனி வலைத்தளம் உட்பட பத்திரிகைகள் அத்துடன்Æ அல்லது இலத்திரனியல் தொடர்பூட்டல்மார்க்கங்கள்) அத்துடன்/அல்லது வங்கியினால் பொருத்தமானது எனக் கருதப்படக்கூடியவாறான வேறு ஏதேனும் வழிகளில் எழுத்தில் வழங்கப்படல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட விதத்தில் வழங்கப்பட்ட அறிவித்தல்கள் பின்வருமாறு நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

அஞ்சல் மூலம் அனுப்பப்படின் அஞ்சலில் சேர்க்கப்பட்ட இரண்டு (2) நாட்களில் மின்னஞ்சல், குறுஞ்செய்திச் சேவைகள் மூலம் (“SMS”) அத்துடன்/அல்லது வேறு இலத்திரனியல் வடிவங்களில் அனுப்பப்படுமிடத்து, ஊடுகடத்தலின் மீது வங்கி விநியோகம் வழங்கப்படவில்லை என்ற அறிவித்தலைப் பெற்றிருந்தாலொழிய இவ்விடயத்தில், இது வேறுபட்ட முறையில் தொடர்பூட்டப்படுதல் வேண்டும் அத்துடன் அறிவித்தல்கள் பகிரங்க அறிவித்தல்களாக நாளாந்த செய்தித்தாள்களிலும் வங்கிக் கிளைகளுக்கு, தன்னியக்கக் கூற்றுப் பொறிகளுக்கு இடுகை செய்வதன் மூலமும் வங்கியின் கம்பனி வலைத்தளம் மூலமும் மேற்கொள்ளப்படலாம். அத்தகைய விடயங்களைப் பொறுத்தவரை அவை பிரசுரிக்கப்படுகின்ற அல்லது இடுகை செய்யப்படும் நேரத்தில் அல்லது வங்கி அல்லது வாங்கி தொடர்பாடலில் தெரிவிக்கும் நேரத்தில் காத்திரமானதாக இருக்கும்.

மேற்குறிப்பிட்ட முறை மூலம் அனுப்பப்படுகின்ற அறிவித்தல் போதுமானதாகவும் சரியானதாகவும் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் வாடிக்கையாளரைப் பிணித்தலையும் மேற்கொள்ளும்.

வாடிக்கையாளர் தொடர்பு கொள்வதற்கான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வங்கிக்கு வழங்கவில்லையாயின், அறிவித்தலைப் பெறாதமையின் காரணமாக ஏற்படக்கூடிய இழப்பினை தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கும். இறுதியாக வங்கிக்கு அறிவித்த முகவரியில்/ தகவல் தொடர்புகள் சென்றடையும் விதத்தில் வாடிக்கையாளர் இல்லையென வங்கி நியாயமான விதத்தில் நம்புமாயின், அறிவித்தல்களை

அனுப்புவதனை இடைநிறுத்தும் அல்லது நிறுத்தும். அத்தகைய சந்தர்ப்பத்தில் வாடிக்கையாளர் அறிவித்தலின் அனைத்துத் தேவைப்பாடுகளும் தள்ளுபடி செய்யப்படும்.

## 24. இலத்திரனியல் வங்கித்தொழில் சேவைகள்

24.1 நிகழ்நிலை வங்கித்தொழில், செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் போன்ற இலத்திரனியல் வங்கித்தொழில் சேவைகள் மற்றும் இலத்திரனியல் முறைமையூடாக அனுப்பப்படும்/ வழங்கப்படும் இலத்திரனியல் கூற்றுக்களும் சேவைகள் மற்றும் வசதிகள் தொடர்பில் குறிப்பிட்ட நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாக இருக்கும்.

## 25. ஆளுகைச் சட்டம்

### 25.1 நியாயாதிக்கத் தலம்

வேறு ஏதேனும் நாட்டிலுள்ள அல்லது வேறு ஏதேனும் நீதிமன்ற நியாயாதிக்கத்திற்குட்பட்ட வாடிக்கையாளர் ஒருவருக்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கு வங்கிக்குள்ள உரிமைக்குப் பங்கமில்லாமல், வாடிக்கையாளரானவர் இலங்கை நீதிமன்றத்தின் பிரத்தியேகமற்ற நியாயாதிக்கத்திற்கு மீளளிக்க முடியாதவாறு ஒப்புதல் அளிக்கின்றார் (வங்கிக்கெதிராக இலங்கை நீதிமன்றங்களில் மாத்திரமே வழக்குத் தொடரலாம்).

பொருண்மைச் சட்டம்

இவ்வுடன்படிக்கை இலங்கை சட்டத்தினால் ஆளுகை செய்யப்படல் வேண்டும்.

**நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பி.எல்.சி**
PQ118
46/58, **நவம் மாவத்தை, கொழும்பு 2.**

இறுதி மதிப்பாய்வு

2025 ஏப்ரல்